மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

## Children's Voices for Human Rights




http://www.thenewsminute.com/article/child-labour-india-has-seen-decline-between-2001-and-2011-says-govt-40258

மனித உரிமைகளுக்கான குழந்தைகளின் குரல் - 75 - 2016

# குழந்தைகள் சத்துக்குறைவுடன் இருப்பது கடந்த ஆண்டுகளில் இருந்ததைவிட 19 சதவீதம் குறைந்தபிறகும், இந்தியாவில் ஊட்டச்சத்தின்மைக்கு எதிரான யுத்தம் இன்னுமும் இருண்டதாகவே உள்ளது

*– சிசீர் திரிபாதி*

இந்தியாவில் உள்ள மொத்தக் குழந்தைகளில் மூன்றில் ஒரு குழந்தை சத்துக்குறைவால் வளர்ச்சி குறைந்து குள்ளமாக இருக்கிறது. கடந்த சில பத்தாண்டுகளில் ஊட்டச் சத்துக் குறைபாட்டை சரிசெய்வதற்கான சமூக நலத் திட்டங்கள் பல கொண்டுவரப்பட்ட போதிலும் இந்த நிலை தொடர்கிறது. ஊட்டச்சத்துக் குறைவால் குழந்தைகள் குள்ளமாதல் இன்னுமும் ஒரு முதன்மையான சுகாதாரப் பிரச்சனையாக உள்ளது.



ஊட்டச்சத்துக் குறைபாடு தொடர்பாக பட்ஜெட் மற்றும் ஆளுகை பொறுப்புடைத்தன்மைக்கான மையம் (CBGA) வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து இந்தியாவில் உள்ள மொத்தக் குழந்தைகளில் குறைந்தது 29 சதவீத குழந்தைகள் குள்ளமாக உள்ளனர் என்பது தெரியவருகிறது. அந்த அறிக்கை, வேறு சில முக்கிய விஷயங்களைப் பற்றியும் கூர்ந்து நோக்கியுள்ளது. கடந்த ஆண்டில் மத்திய நிதி கட்டுமானம் மற்றும் கொள்கை அமைப்பில் ஏற்பட்டுள்ள சமீபத்திய மாற்றங்கள், ஊட்டச் சத்துக்கான நிதி ஒதுக்கீட்டில் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியதைப்பற்றி குறிப்பிடும் அதே நேரத்தில் இந்த CBGAவின் அறிக்கை, "ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்குவதற்கு பல்துறை அணுகுமுறை தேவை என்பதால் பல்வேறு துறைகளில் ஊட்டச்சத்துக்கான பொது முதலீடு மிக அவசியம்" என்பதையும் வலியுறுத்துகிறது. ஊட்டச்சத்துக் குறைபாட்டுப் பிரச்சனையைத் தீர்ப்பதில் உள்ள சிக்கல்களை ஆராய்ந்தால், " ஊட்டச்சத்து பற்றிய விவாதங்களுக்கும் அதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தொடர்பில்லாமல் இருக்கிறது" என்றும் CBGA அறிக்கை, குறிப்பிடுகிறது.

## CBGAவின் அறிக்கையிலிருந்து தெரிவது என்ன ?

பெண்கள் மற்றும் குழந்தை வளர்ச்சி அமைச்சகத்தின் 2013–14ம் ஆண்டுக்கான தேசிய கணக்கெடுப்பின்படி (2015ல் வெளியிடப்பட்டது) இந்தியாவில் 39 சதவீத அளவு 5 வயதுக்கும் குறைவான வயதுடைய குழந்தைகள் ஊட்டச் சத்துக் குறைபாட்டால் குள்ளமாக உள்ளனர். இந்த சதவீதம், 2005–06ல் எடுக்கப்பட்ட இந்த அமைச்சகத்தின் முந்தைய கணக்கெடுப்புக்குப் பின்னர் 19.4 சதவீதம் குறைந்துள்ளது. ஆனால், குழந்தைகள் குள்ளமாகும் சதவீதம் ஆண்டுக்கு 2.4% என்று இருக்கிறது. உலகளாவிய இலக்கை நிறைவேற்ற இந்த வேகம் போதாது.

2015ம் ஆண்டில், 5 வயதுக்கு உட்பட்ட ஏறக்குறைய 47 மில்லியன் (470 லட்சம்) குழந்தைகள் சத்துக்குறைவால் குள்ளமாகும் நோயால் அவதிப்படுகின்ற நேரத்தில்,

***ஊட்டசத்தின்மையால் குழந்தைகள் இறப்பதையும் குள்ளமாதலையும் குறைப்பதற்கான, ஊட்டச் சத்தை மையப்படுத்திய மற்றும் அது பற்றிய புரிதலோடு கூடிய பத்து அவசியமான தலையீடுகள்:***

★ குழந்தை பிறந்தவுடனேயே தாய்ப்பால் அளிக்க முயற்சி எடுத்தல் (பிறந்து ஒரு மணி நேரத்துக்குள்) அவ்வாறு செய்வது பிறந்த சில மணிநேரங்களில் குழந்தை இறக்கும் விகிதத்தை குறைக்கும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும். மேலும் நோய்த்தொற்று ஏற்படுவதை தடுக்கும்.

★ குழந்தைக்கு தாய்ப்பால் மட்டும் கொடுத்தல் (6 மாதங்கள் வரை) நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும். குழந்தைக்கு நோய் தொற்றுகள் ஏற்படுவதை தடுத்து அதன் மூலம் குழந்தை உயிர் வாழ்வதையும் அதன் வளர்ச்சியையும் மேம்படுத்தும்.

★ தாய்ப்பாலோடு அதற்கு இணையான கூடுதல் உணவு வகைகளை சரியான காலத்தில் குழந்தைக்கு அறிமுகப்படுத்துதல் (6 மாதங்களுக்குப் பிறகு) குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்துக்கு பங்களிக்கும். சத்துக் குறைவால் வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாமல் குழந்தைகள் குள்ளமாவதைக் குறைக்கும்.

★ ஆறிலிருந்து 24 மாத வயதுக் குழந்தைகளுக்கு தாய்ப்பாலுக்கு இணையான கூடுதல் உணவுகளை தரமான முறையிலும் சரியான அளவிலும் சரியான இடைவெளியிலும் தருதல் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்துக்கு பங்களிக்கும். சத்துக் குறைவால் வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாமல் குழந்தைகள் குள்ளமாவதைக் குறைக்கும்.

★ கூடுதல் உணவுகளை பாதுகாப்பான முறையில் கையாளுதல் மற்றும் சுகாதாரமான முறையில் அவற்றை குழந்தைக்குத் தருதல் கிருமி தொற்றுதலையும் குழந்தைகள் குள்ளமாவதையும் குறைக்கும்.

★ குழந்தைக்கு நோய்வாய்ப்பட்டிருக்கும்போதும் அதற்குப் பிறகும் போதுமான அளவில் உணவளிப்பது உயரத்துக்கு ஏற்ற எடை இல்லாததைத் தடுக்கும்.

★ நோய்த் தடுப்பு மருந்துகளைப் போடுதல் மற்றும் நுண் சத்துக்களை அளித்தல் (வைட்டமின் ஏ, இரும்புச் சத்து மற்றும் துத்தநாக சத்து மருந்துகள்) நோய் எதிர்ப்பு சக்தியையும் மேம்பட்ட வாழ்வையும் தரும்.

★ கடுமையான ஊட்டச் சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு போதுமான உணவளித்தல் – உயரத்துக்கு ஏற்ற எடை இல்லாமல் இருக்கும் பிரச்சனையை தீர்க்கும், குழந்தைகள் இறப்பதை குறைக்கும்.

★ வளரிளம் பெண்களுக்கும் இனப் பெருக்க வயதுடைய பெண்களுக்கும் (தாய்மை அடையும் வயது) போதுமான ஊட்டச் சத்து அளித்தல் கர்ப்ப காலத்தில் ஊட்டச் சத்தை மேம்படுத்துவதன் மூலம் ஊட்டச் சத்து குறைபாட்டால் வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாமல் குள்ளமாக குழந்தைகள் பிறப்பதைக் குறைக்கும்.

★ கர்ப்பிணிப் பெண்களுக்கும் தாய்ப்பாலூட்டும் பெண்களுக்கும் போதுமான அளவுக்கு ஊட்டச் சத்து அளித்தல் – கர்ப்ப காலத்தில் ஊட்டச் சத்தை மேம்படுத்துவதன் மூலம் ஊட்டச் சத்து குறைபாட்டால் வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாமல் குள்ளமாக குழந்தைகள் பிறப்பதைக் குறைக்கும்.

உலகம் முழுதும் உள்ள இந்தப் பிரச்சனையின் மையப்புள்ளியாக இந்தியா உள்ளது. சத்துக்குறைவால் குழந்தைகள் குள்ளமாகும் பிரச்சனை குறித்த உலகளாவிய அளவிலான சமீபத்திய உத்தேச மதிப்பீட்டின்படி, குள்ளமான குழந்தைகள் ஆப்பிரிக்காவைவிட இந்தியாவில்தான் அதிக விகிதத்தில் உள்ளனர் (32 சதவீதம்). லத்தின் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளைவிட(11.7 சதவீதம்) இது மூன்று மடங்கு அதிகம்.

இந்தியாவில் ஊட்டச் சத்துக் குறைபாட்டுப் பிரச்சனையை தீர்ப்பதில் சாதித்தது என்ன என்பதையும் இன்னும் செய்யவேண்டியது என்ன என்பதையும் பார்த்தால், ஊட்டச்சத்தின்மையைக் குறைப்பதில் இந்தியா பெற்ற வெற்றி 2015ம்ஆண்டுக்கான ஊட்டச்சத்து பற்றிய உலகளாவிய அறிக்கையில் (GNR) மதிப்புடன் குறிப்பிடப்பட்டுள்ளது என்று ஒடிசா மாநிலத்தின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் ஆணையர், செயலர், ஆர்த்தி அஹூஜா குறிப்பிடுகிறார். ‘‘சுத்தியலோடு இருக்கும் ஒரு மனிதனுக்கு பார்க்கின்ற எல்லாமே ஆணி போலத்தான் தெரியும். அதுபோல ஒரு ஊட்டச்சத்து நிபுணர் பெரும்பாலான நடவடிக்கைகளை ஊட்டச்சத்து என்ற கண்ணாடியின் வழியாகப் பார்ப்பதால் எங்கும் சத்துக் குறைபாடு இருப்பதாகத்தான் தெரியும்’’ என்றும் ஆர்த்தி கூறுகிறார்.

‘‘உடல் நலத்தைப் பாதிக்கும் அளவுக்கு குறைவான அல்லது தேவைக்கு அதிகமான ஊட்டச்சத்தை எடுத்துக்கொள்வதால் ஏற்படும் ஊட்டச்சத்தின்மை, ஊட்டச்சத்து தொடர்பான பல காரணிகளால் பாதிக்கப்படுகிறது. சாப்பிடும் உணவு மற்றும் உடல் எடையை குறைக்கவோ கூட்டவோ ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வெவ்வேறு வகையான உணவை உண்ணுதல் ஆகியவை தவிர குடிநீர், நோய்த்தடுப்பு, உணவு வகைகள், திறந்தவெளியில் மலம் கழித்தல், தாயின் வயது மற்றும் கல்வி ஆகிய காரணிகளும் ஊட்டச் சத்து நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை’’ என்று கூறுகிறார் அஹூஜா.

சமீபத்தில் வெளியிடப்பட்ட 2014ம் ஆண்டின் குழந்தைகள் பற்றிய துரித கணக்கெடுப்புத் தகவல், அதற்கு முன்னர் தேசிய அளவில் எடுக்கப்பட்ட தேசிய குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்போடு (NFHS–3) ஒப்பிடப்படும்போது, வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாமல் குள்ளமாக இருக்கும் குழந்தைகள் சதவீதம் 48 லிருந்து 39 ஆக குறைந்துள்ளதையும், உயரத்துக்கு ஏற்ற எடை இல்லாமல் இருக்கும் குழந்தைகள் விகிதம் சரிவடைந்ததையும், தாய்ப்பால் மட்டும் அளிப்பவர்களின் சதவீதம் அதிகரித்ததையும் எடுத்துக்காட்டுகிறது. எனினும், ஏறக்குறைய அனைத்து சமூகக் குறியீடுகளிலும் உள்ளது போல் இதிலும் பகுதி (பிராந்தியம்) சார்ந்த வேறுபாடுகள் உள்ளன. வயதுக்கு ஏற்ற உயரத்தில் இல்லாமல் குள்ளமாக இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள சரிவு விகிதம் மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபடுகிறது. இதற்கு மாறாக, சில இடங்களில், உயரத்துக்கேற்றவாறு இல்லாமல் குறைந்த எடையோடு இருக்கும் குழந்தைகள் விகிதம் இருப்பது குறித்து கவலைப்படுவதற்கு காரணம் இருக்கிறது.

**‘‘ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்குவதற்கு பல்துறை அணுகுமுறை தேவை என்பதால் பல்வேறு துறைகளில் ஊட்டச்சத்துக்கான பொது முதலீடு மிக அவசியம். ஊட்டச்சத்து பற்றிய விவாதங்களுக்கும் அதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தொடர்பில்லாமல் இருக்கிறது’’**

இந்தியாவிலிருந்து வரும் இத்தகைய தகவல் ஆறுதல் அளிப்பவையாக இருந்தாலும், உலக அளவில் ஒப்பிடும்போது இந்த நிலை உவப்பானதாக இல்லை. 2015ம்ஆண்டுக்கான ஊட்டச்சத்து பற்றிய உலகளாவிய அறிக்கையில் (GNR) இந்தியா வரிசையில் தனக்கு முன்னும் பின்னும் உள்ள நாடுகளைவிட மிக மோசமான நிலையில் உள்ளது. கயானா, ஹைட்டி, ஹாண்டுரஸ் ஆகிய நாடுகள் ஒருபக்கமும் இந்தோனேசியா, ஈரான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகள் மறுபக்கமும் இருக்க, இவற்றுக்கு இடையே வைக்கப்பட்டுள்ள இந்தியாவின் ரத்தசோகையால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவரம் (2011ல் 48 சதவீதம்) மேற்குறிப்பிட்டுள்ள நாடுகளைவிட மோசமாக உள்ளது என்கிறார் அ‘ஹூஜா.

குள்ளமாக பிறப்பது மற்றும் உயரத்துக்கேற்ற எடை இல்லாமல் பிறப்பது ஆகியவற்றிலும் மேற்குறிப்பிட்ட முதலெழுத்தின்படி வரிசையில் உள்ள அண்டை நாடுகளைவிட இந்தியா மிகமோசமான நிலையில் உள்ளது. புவியியல் சார்ந்து அருகில் உள்ள நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலை ஏறக்குறைய ஒரே மாதிரிதான் உள்ளது. எனவே, வயதுக்கேற்ற உயரம் இல்லாமல் குள்ளமாக பிறக்கும் குழந்தைகள் விகிதம் குறைந்த வேகத்தை

எடுத்துக்கொண்டால் அது ஒரு நல்ல செய்தியாகும். வேகம் துரிதப்படுத்தப்படவேண்டும். ஊட்டச்சத்தின்மையைக் கட்டுப்படுத்த தெளிவான பாதை இருப்பதை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. தெளிவான நோக்கம் மற்றும் அதை நிறைவேற்றுவதற்கான திறனோடு, நாடுகள் இந்த சமமற்ற மற்றும் அநீதியான கோட்டையை தகர்த்து வெற்றி பெற்றிருக்க முடியும் வெற்றி பெற்றிருந்திருக்கலாம்.

**“70 சதவீத ஆதிவாசி மக்கள் இந்தியாவின் மத்திய பகுதியில் வாழ்கின்றனர். இந்தப் பகுதி வளங்கள் அதிகம் உள்ள பகுதியாக இருந்தாலும், மிகவும் ஏழ்மையான மக்களின் தாயகமாக அது உள்ளது. சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தால் நாட்டின் பிற பகுதியில் வாழும் மக்கள் பயன் பெற்ற அதே அளவுக்கு இந்த மக்கள் பயன் பெறவில்லை. சில இடங்களில், பழங்குடிக்கு எதிரான, சந்தையை மையப்படுத்திய வனக் கொள்கைகளால்தான் பழங்குடி மக்கள் உண்மையில் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பார்கள் அல்லது அவர்களது மூதாதையர் வாழ்ந்த பாரம்பரிய இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பார்கள்”**

உணவு உரிமைக்கான உச்ச நீதிமன்ற ஆணையரும் திட்ட ஆணையத்தின் முன்னாள் செயலாளருமான முனைவர் NC சக்சேனா அவர்கள், பட்டியல் பழங்குடியினத்தைச் சேர்ந்த குழந்தைகளுள் நிலவிய ஊட்டச்சத்தின்மை பிரிச்சனைகளைப் பற்றி விவாதிக்கும்போது, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிக்கான சேவைகள் திட்டத்தின் (ICDS) கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்கள் அளிக்கும் சேவைகளை பழங்குடியினக் குழந்தைகள் பெற முடிவதில்லை என்று உணவு உரிமைக்காக பணிபுரியும் மனித உரிமைக் குழுக்கள் தெரிவித்ததாக குறிப்பிட்டார். மேலும், பழங்குடியினக் குழந்தைகளில் பலர் குறைந்த ஊட்டச்சத்தோடும் ரத்தசோகையோடும் இருப்பதால், பழங்குடியினக் குழந்தைகள் உயிர் பிழைத்து வாழ்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு என்றும் குறிப்பிட்டார். என்று சக்சேனா கூறுகிறார். “இத்தகைய ஒதுக்குப்புறமான, சுலபமாக அணுகமுடியாத இடங்களில் உள்ள அரசாங்க அலுவலர்களின் பொறுப்பற்ற தன்மையால் அரசாங்கத்திட்டங்கள் அனைத்தும் மிக மோசமாக நிறைவேற்றப்பட்டிருக்கும் அல்லது மக்களை சென்றடையாமல் இருக்கும். அதனால் ஆதிவாசிகள் சுத்தமாக புறக்கணிக்கப்படுகிறார்கள்” என்றும் சக்சேனா கூறுகிறார்.

ஊட்டச் சத்து குறைபாடுள்ள குழந்தைகளில் 10 சதவீதம் மட்டும்தான் அரசாங்க ஆவணங்களில் உள்ளது என்பதையும் CBGA அறிக்கை தெளிவாக புலப்படுத்துகிறது. ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் பற்றிய தகவலை அறைகுறையாக ஆவணப்படுத்துவது, களப் பணியாளர்கள் மற்றும் அவர்களை மேற்பார்வையிடுபவர் ஆகியோரின் கூட்டு முயற்சியால் நடைபெறுகிறது. இது பற்றிப் பேசும்போது, சக்சேனா அவர்கள், “பழங்குடிகளுக்கு அவர்களின் உணவுக்கான உரிமை மறுக்கப்பட்ட சம்பவங்களை சுட்டிக்காட்டலாம். மத்திய பிரதேசத்தில் உள்ள பிர்ஹார் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு கல்விக்கான உரிமையும் பள்ளியில் மதிய உணவு உண்பதற்கான உரிமையும் மறுக்கப்படுகிறது. ஏனென்றால், பிர்ஹார் குழந்தைகள் பள்ளியில் உள்ள பாத்திரங்களை அசுத்தப்படுத்திவிடுவார்கள் என்று ஆசிரியைகள் அச்சப்படுவதால் தான். பழங்குடியினக் குழந்தைகளில், 71.4 சதவீதத்தினர் ஊட்டச்சத்து குறைபாட்டுடனும் 82.5 சதவீதத்தினர் ரத்தசோகையுடனும் இருப்பதால் அவர்கள் உயிர் வாழ்வதற்கான வாய்ப்புகள் குறைவு” என்று கூறுகிறார்.

குாந்தைகளிடையே உள்ள ஊட்டச்சத்தின்மை பிரச்சனையை சரி செய்வதற்கான நடவடிக்கைகள் நிறைய எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கான ஆதாரமாக பல வழக்கு ஆய்வுகளையும் தகவல்களையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிற அதே நேரத்தில், இன்னமும் செய்யப்படவேண்டியவை நிறைய இருக்கின்றன.

இந்தியாவில் குழந்தைகளிடையே நிலவும் ஊட்டச்சத்–தின்மை பிரச்சனையை குறைக்கவும் படிப்படியாக முற்றிலும் ஒழிப்பதற்கும் அதற்காக கொண்டுவரப்பட்ட திட்டங்களை அமல்படுத்தும் பொறுப்பில் உள்ள கொள்கை உருவாக்குபவர்களிடையே ஒரு ஒருங்கிணைந்த கூட்டு முயற்சி தேவை.

**ஆதாரம்:** **http://www.firstpost.com/living/despite-19-decline-in-childhood-stunting-indias-battle-against-malnutrition-still-looks-bleak-2701006.html**

# சிறுபான்மையினரின் கல்வி உரிமைகள் பாதுகாப்பு

- சைமா சாயீத்

*அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்தின் சிறுபான்மையினர் நிறுவனம் என்ற நிலை வியக்கத்தக்கதுதானா என்பது நீதிமன்ற விசாரணையில் இருக்கிறது என்பது ஒருபுறமிருக்க, சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளை தட்டிப்பறிக்கிற குறுகிய, பாகுபாடுள்ள கண்ணோட்டம் இந்திய அரசுக்கு இருக்கக்கூடாது. ஒரு கல்வி நிறுவனத்தை உருவாக்குகிறவர்களும், சம்பந்தப்பட்ட சமூகமும் பெருமளவில் உடல் சார்ந்த, உணர்வு சார்ந்த, நிதி சார்ந்த சுமைகளை ஏற்கவேண்டியிருக்கிறது, உழைப்பை வழங்க வேண்டியிருக்கிறது. "கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துதல், நிர்வகித்தல்" என்ற சிறுபான்மையினரின் உரிமைகள் குறித்து விளக்கமளிக்கிறபோது, உச்சநீதிமன்றத்திற்கு வந்த பல்வேறு வழக்குகளை கவனத்தில் கொள்ளத் தவறக் கூடாது.*

அரசமைப்பு சாசன நிர்ணய சபையின் விவாதங்கள் நடைபெற்ற காலத்திலிருந்து (1946–49) இந்தியாவில் உள்ள சிறுபான்மையினரின் உரிமைகள் பெருமளவுக்கு விவாதப் பொருளாக்கப்பட்டு வந்துள்ளன. சிறுபான்மையினரின் பண்பாட்டு உரிமைகளும், மொழி உரிமைகளும், கல்வி உரிமைகளும் அரசமைப்பு சாசனத்தில் தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இருந்தபோதிலும், அதுகுறித்த விமர்சனங்களும் எதிர் விமர்சனங்களும் இன்னும் தீர்வு காணப்படாமல் தொடர்கின்றன. சட்ட உரை 30(1)ல் "கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துதல், நிர்வகித்தல்" தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது. அதில், சட்ட உரை 29(1)(2)ல் கூறப்பட்டுள்ள சிறுபான்மையினர் "பண்பாட்டு மற்றும் கல்வி உரிமைகள்" பாதுகாப்பு என்பதை நோக்கமாகக் கொண்ட விரிவான ஏற்பாடுகளும், விதிகளும் கூறப்பட்டுள்ளன.

இந்த இடத்தில் மட்டும்தான் அரசமைப்பு சாசனம் சிறுபான்மையினர் குறித்து பின்வரும் வரையறையை வழங்குகிறது, அவர்களது உரிமைகள் குறித்துச் சொல்வது: "இந்திய எல்லைக்குள் அல்லது இந்தியாவின் எந்தவொரு பகுதியிலும், தங்களக்குச் சொந்தமான தனிப்பட்ட மொழி, எழுத்து அல்லது பண்பாடு எனக் கொண்டு வாழும் குடிமக்களில் எந்தவொரு பிரிவினரும் அவற்றைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கான உரிமையைப் பெற்றுள்ளது" மேலும், அரசமைப்பு சாசனத்தின் சட்ட உரை 15(1), அடிப்படை உரிமைகள், பாகம் 3ன் கீழ், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை நிலைநாட்டுவதற்கு ஒரு வழியாக, மதம், இனம், சாதி அல்லது வர்க்கம் என்ற அடிப்படைகளில் குடிமக்களை அரசு பாகுபடுத்துவதிலிருந்து தடுக்கிறது.

இவை ஒரு நியாயமான, தாராள மனமுள்ள, சமத்துவமான, மதச்சார்பற்ற அரசுக்கும் அதன் சிறுபான்மை மக்களுக்கும் இடையேயான உறவின் அடித்தளமாக அமைகின்றன. அதேவேளையில் நமது அரசமைப்பு சாசனத்தை உருவாக்கியவர்கள் முன்வைத்த லட்சியங்களுக்கும் அவை எந்த அளவுக்கு செயல்படுத்தப்பட்டன என்பதற்கும் இடையேயான பெரும் இடைவெளி வெளிப்படுகிறது. அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கும் உண்மை நிலைமைக்குமான இடைவெளியையும் காட்டுகிறது. இன்று "சிறுபான்மையினர் பிரச்சனை" என்பது மறுவரையறை செய்யப்படுகிறது. ஒரு குறுகிய பெரும்பான்மை வாதத்திலிருந்தும் அந்த மக்களைக் கவர்கிற கண்ணோட்டத்திலிருந்தும் இப்படிப்பட்ட சர்ச்சைக்குரிய விஷயங்கள் விவாதிக்கப்படுகின்றன. இந்தியாவில் அரசு– சிறுபான்மையினர் உறவைக் கட்டமைத்த வரலாற்றுப்பூர்வமான, அரசியல்பூர்வமான, சமூக அடிப்படையிலான கற்பிதங்களை அந்த விவாதங்கள் கருத்தில் கொள்வதில்லை. ஊடகங்களோ பரபரப்பூட்டுகிற, உணர்ச்சி வசப்படுத்துகிற போக்கைத்தான் கடைப்பிடிக்கின்றன. இந்த சிக்கலான பிரச்சனையை ஊடகங்கள் அணுகுவதில் விமர்சனப்பூர்வமான கண்ணோட்டமும் இல்லை, இயல்புகள் பற்றிய புரிதலும் இல்லை. மாறாக, இந்தப் பிரச்சனையை மேலும் சிக்கலாக்குவதாகவே ஊடகச் செயல்பாடுகள் உள்ளன. இன்றைய கேள்வி, சிறுபான்மையினருக்கு குறிப்பாக, முஸ்லீம்களுக்கு

கல்வி நிறுவனங்களையும், பல்கலைக்கழகங்களையும் ஏற்படுத்தி இயக்குவதற்கான உரிமை இருக்கிறதா என்பதுதான் (கிறிஸ்துவ, சீக்கிய, சமண கல்வி நிறுவனங்களுக்கு இந்தப் பிரச்சனை இல்லை என்று எடுத்துக்கொள்ளப்படுகிறது). இந்தக் கேள்வி எந்த அளவுக்கு கறாரானதாக இருக்கிறது என்பது இந்தியாவின் பெருமைக்குரிய இரண்டு பல்கலைக்கழகங்கள் ஒரு நெருக்கடியைச் சந்திக்கிற நிலையில் அப்பட்டமாக வெளிப்படுகிறது. முஸ்லீம் மக்களோடு பண்பாட்டுப்பூர்வமாகவும், கல்விப்பூர்வமாகவும் நெருக்கமாக அடையாளம் காணப்படுகிற அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகம் (AMU), ஜமியா மிலியா இஸ்லாமியா (JMI) ஆகியவையே அந்த இரண்டு பல்கலைக்கழகங்கள் முஸ்லீம் சமூகத்திற்கும், ஒட்டுமொத்தத்தில் தேசத்திற்கும் சேவை செய்வதில் ஒரு நூற்றாண்டை இந்த இரு கல்வி நிறுவனங்களும் அரசியல் உள்நோக்கமுள்ள செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒரு நெருக்கடியை சந்தித்துக்கொண்டிருக்கின்றன.

இந்த இரு நிறுவனங்களுமே விடுதலைப் போராட்ட இயக்கமாகிய கிலாபத் இயக்கத்திலிருந்து தங்களுடைய தேசிய அடையாளத்தைப் பெற்றுள்ளன. முஸ்லீம் சமூகத்தை நவீனப்படுத்துவதிலும் மேம்படுத்துவதிலும் இரு நிறுவனங்களும் பங்களித்து வந்துள்ளன. அதற்காக, முற்போக்கான அறிவியல்பூர்வ கண்ணோட்டத்தையும், கல்வியையும் கடைப்பிடித்து வந்துள்ளன. நாடு விடுதலை பெற்றதிலிருந்து முஸ்லீம் சமூகத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்துவந்துள்ள கல்வியின்மை, வேலையின்மை, வறுமை ஆகிய பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான கருவியாக மதச்சார்பற்ற கல்வியை இரண்டு நிறுவனங்களுமே உறுதியோடு பயன்படுத்தி வந்துள்ளன. 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நாட்டு மக்களில் முஸ்லீம்கள் 14.2 சதவீதம் பேர் உள்ளனர் என்பது மனதில் கொள்ளத்தக்கது.

## வரலாற்றுப் பார்வை

முஸ்லீம் அறிஞரும் அரசியலில் பிரமுகருமான சர் சையத் அகமது கான் 1875ல் மொகமதன் ஆங்கிலோ ஓரியன்டல் கல்லூரியை (MAO) தொடங்கினார். 1920ல் அதன் பெயர் அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகம் (AMU) என்று மாற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து அதே ஆண்டில், அந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து பிரிந்து ஜமியா மிலியா இஸ்லாமியா (JMI) ஏற்படுத்தப்பட்டது. முன்னணி விடுதலைப் போராட்ட வீரர்களும் எதிர்காலம் குறித்து சிந்தித்தவர்களுமான மௌலானா மெஹமூத் ஹாஸன், மௌலானா முகமது அலி, ஹக்கீம் அஜ்மல் கான், முக்தார் அகமது அன்சாரி, அப்துல் மஜீத் க்வாஜா போன்றவர்களின் உறுதியான தேசிய உணர்வுகளின் விளைவாக உருவானதுதான் JMI. கிலாபத் இயக்கத்தின் தோல்வி காரணமாக தொடக்க காலத்தில் கடுமையான நிதி நெருக்கடிக்கு உள்ளாகியிருந்த JMI, காந்தியின் விடாமுயற்சியுடன் கூடிய ஆதரவு காரணமாக தாக்குப்பிடித்து நின்றது. அதன் நிறுவனர்களான எம்.ஏ. அன்சாரி, ஹக்கீம் அஜ்மல் கான், அப்துல் மஜீத் க்வாஜா ஆகியோரிடம் காந்தி சொன்ன வார்த்தைகள் புகழ் பெற்றவை: “ஜமீயா தொடர்ந்து செயல்பட்டாக வேண்டும். அதன் நிதி நிலைமை குறித்து நீங்கள் கவலைப்படுவீர்களானால், நான் கையில் ஒரு பிச்சைப் பாத்திரம் ஏந்திக்கொண்டு செல்லத் தயாராக இருக்கிறேன்.”

1928ல் ஹக்கீம் அஜ்மல் கான் காலமானார். அவரைத் தொடர்ந்து ஜமீயா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக ஜாகீர் உசேன் பொறுப்பேற்றார். இந்தியாவின் மூன்றாவது குடியரசுத் தலைவரானார் அவர். பெர்லின் பல்கலைக்கழகத்தில் பொருளாதார முனைவர் பட்டம் பெற்ற அவர், அதற்கு முன் அன்றைய MAO கல்லூரியில் பயின்றார். JMI வேந்தராகப் பொறுப்பேற்ற பிறகும், அலிகார் பல்கலைக்கழகத்தின் தனது சகாக்களுக்கு அவர் தொடர்ந்து ஆதரவாக இருந்தார். அவர் காலமானபோது அவரது உடல் JMI வளாகத்தில்தான் அடக்கம் செய்யப்பட்டது. AMU நிறுவனர் சையத் அகமது கான் நினைவிடம் அதன் வளாகத்தில் அமைந்திருப்பது வரலாற்றில் ஒரு தற்செயலான நிகழ்வு அல்ல.

## அலிகார் வழக்கு

அலிகார் பல்கலைக்கழக வழக்கில் தலைமை அரசு வழக்குரைஞர் முகுல் ரோத்தகி, அந்தப் பல்கலைக்கழகத்திற்கு சிறுபான்மையினர் நிறுவனம் என்ற தகுதி நிலை வழங்கப்பட்டிருப்பதை எதிர்த்தார். “மத்தியில் உள்ள நிர்வாக அரசாங்கம் என்ற முறையில், மதச்சார்பற்ற ஒரு அரசு அமைப்பில் ஒரு சிறுபான்மையினர் நிறுவனத்தை அமைத்ததாக இருக்கலாகாது,” என்று அவர் தனது எதிர்ப்புக்குக் காரணம் கூறினார். JMI நிறுவனத்தைப் பொறுத்தவரையில் தேசிய சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் ஆணையத்தின் (NCMEI) ஆணைக்கான ஆதரவை அரசு விலக்கிக்கொள்ள வேண்டும் என்று மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம் அறிவுறுத்தியிருப்பதாகக் கூறியிருக்கிறது என்பதையும்

அவர் காரணம் காட்டியிருந்தார். மதச்சார்பின்மையின் பெயரால் நடத்தப்படும் இந்த சந்தேகத்துக்குரிய முயற்சி உண்மையில் மதச்சார்பின்மை என்ற கட்டமைப்பையே பலவீனப்படுத்துகிறது. நமது முற்போக்கான அரசமைப்பு சாசனத்தின் ஒரு கட்டமைப்பு சார்ந்த அம்சம் மதச்சார்பின்மை. ஆகவே, அரசமைப்பு சாசனத்தின் ஒரு அடிப்படை அம்சமாகிய மதச்சார்பின்மை என்பதை அரசமைப்பு சாசனத்தின் சட்ட உரை 30(1) என்ன கூறுகிறது என்பதோடு இணைத்துப் பார்க்க வேண்டும். இந்த சட்ட உரை சிறுபான்மையினருக்கு கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தவும் நிர்வகிக்கவும் உரிமையளிக்கிறது.

ஜமியா நிறுவனம் 1962ல் நிகர்நிலைப் பல்கலைக்கழகமானது. 1988 டிசம்பரில், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு சிறப்புச் சட்டத்தின் மூலம் மத்திய பல்கலைக்கழகமானது 2011ல் தேசிய சிறுபான்மையினர் கல்வி நிறுவன ஆணையத்தால் அதற்கு சிறுபான்மையினர் கல்வி நிறுவனம் என்ற தகுதி நிலை வழங்கப்பட்டது. ''முஸ்லீம்களால் முஸ்லீம்களின் மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்டதே ஜமியா. அது ஒருபோதும் தனது முஸ்லீம் சிறுபான்மையினர் கல்வி நிறுவனம் என்ற அடையாளத்தை இழந்துவிடவில்லை,'' என்று ஆணையம் கூறியது. ஆகவே, அந்த நிறுவனம் ''சட்ட உரை 30(1)ன் கீழ் வருகிறது. தேசிய சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் சட்டம் பிரிவு 2 (g)க்கு உட்பட்டதாக இருக்கிறது,'' என்றும் ஆணையம் கூறியது.

NCMEI சட்டத்தின் பிரிவு 11(f), எந்தவொரு கல்வி நிறுவனத்தையும் அது சிறுபான்மையினர் நிறுவனம்தானா என்பதை தீர்மானிப்பதற்கும், அவ்வாறு அறிவிப்பதற்குமான அதிகாரத்தை அளிக்கிறது. இதனிடையே, இச்சட்டத்தின் பிரிவு 2(g) ஒரு கல்வி நிறுவனத்துக்கு சிறுபான்மையினர் நிறுவனம் என்ற தகுதி நிலையை அளிப்பதற்கு பின்வரும் அம்சங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது: (1) மதச் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒருவரால் / சேர்ந்தவர்களால் அந்த கல்வி நிறுவனம் நிறுவப்பட்டது; (2) அந்தக் கல்வி நிறுவனம் சிறுபான்மையினர் சமூக நலனுக்காக ஏற்படுத்தப்பட்டது; (3) அந்தக் கல்வி நிறுவனம் சிறுபான்மை சமூகத்தவரால் நிர்வகிக்கப்படுகிறது.

**தற்போதைய தேக்க நிலை**

ஆகவே, அலிகார் பல்கலைக்கழகத்தின் சிறுபான்மையினர் நிறுவனத் தகுதி நீதிமன்ற விசாரணையில் இருக்கிற நிலையில், அரசாங்கம் சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வகையில் குறுகிய, பாரபட்சமான அணுகுமுறையை மேற்கொள்ளக்கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறது. அஜீஸ் பாஷா எதிர் இந்திய அரசு வழக்கில் (AIR1968 SC 662) உச்சநீதிமன்றம், அரசமைப்பு சாசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள , ஒரு கல்வி நிறுவனத்தை ''ஏற்படுத்துதல்'' என்ற வார்த்தை குறித்து ஒரு நடைமுறை சாத்தியமில்லாத, குறுகிய கண்ணோட்டத்தை முன்வைத்தது ஒரு கெடுவாய்ப்பாகும்.

ஒரு கல்வி நிறுவனம் ஏற்படுத்தப்படுகிறது என்றால் அது, அதனை நிறுவுகிறவர்கள் உடல் சார்ந்தும், உணர்வு சார்ந்தும், நிதிநிலை சார்ந்தும் மிகப்பெரிய சுமையை ஏற்கவேண்டியுள்ளது, உழைப்பை வழங்க வேண்டியுள்ளது. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின் மூலமாகத்தான் இது நடைமுறைக்கு வந்தது என்று கூறுவது உண்மையைக் காணத் தவறுவதாகி விடும். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகிற ஒரு சட்டம், ஏற்கனவே செயல்பட்டுக்கொண்டிருக்கிற ஒரு கல்வி நிறுவனத்தை சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கிறதேயன்றி ஒரு புதிய நிறுவனத்தை அது ஏற்படுத்திவிட முடியாது. AMU, JMI இரண்டுமே அவை தொடர்பான நாடாளுமன்ற சட்டங்கள் வருவதற்கு முன்பாகவே நிறுவப்பட்டு செயல்பட்டு வந்துள்ளன. 1981ல் நாடாளுமன்றத்தில் AMU சட்டத்திருத்தம், அந்தப் பல்கலைக்கழகம் முஸ்லீம்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு கல்வி நிறுவனம்தான் என சரியாக ஏற்றுக்கொண்டுள்ளது. அதனை தற்போதைய அரசு அங்கீகரித்து, அந்தச் சட்டத்திருத்தத்தை வலுப்படுத்துவதே இன்றைய அரசு செய்ய வேண்டியது.

''கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தவும் நிர்வகிக்கவும்'' சிறுபான்மையினருக்கு உள்ள உரிமைகள் குறித்து விளக்கமளிக்கையில், இது தொடர்பான உச்சநீதிமன்றம் கையாண்ட பல்வேறு வழக்குகளை காணத் தவறக்கூடாது. கேரள கல்விச் சட்ட வழக்கு (AIR 1958 SC 956), ஆந்திரப் பிரதேச கிறிஸ்துவ மருத்துவ சங்கம் எதிர் ஆந்திர மாநில அரசு வழக்கு (AIR 1986 SC 1490), செயின்ட் ஸ்டீபன் கல்லூரி எதிர் தில்லி பல்கலைக்கழகம் வழக்கு (1992 SC 558), டி.எம்.ஏ. பாய் பவுண்டேஷன் எதிர் கர்நாடக மாநில அரசு வழக்கு (2002//8 SCC 481) ஆகியவற்றில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புகளில் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தவும் நிர்வகிக்கவும் சிறுபான்மையினருக்கு உள்ள உரிமை வலுவான அடிவாரம் போன்றது என்றும், அதன்மீதுதான் அரசமைப்பு

**இதன் தொடர்ச்சி பக்கம் 19ல்...**

# அகில இந்திய பள்ளிக் கல்வி ஆய்வுகளின் பின்னணியில் மறைந்துள்ள உலகளாவிய திட்டம்

– அம்ருத் ஜி. குமார்

மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் சார்பில் நடத்தப்படுகின்ற அகில இந்திய பள்ளிக் கல்வி ஆய்வு ஒரு புதிய தேசிய கல்வி நிர்வாக ஏற்பாட்டை முன்மொழிகிறது. அது நவீன தாராள மய பொருளாதாரத்திற்கும் அத்தோடு இணைந்து வருகிற தொழிலாளர் சந்தைக்கும் ஒத்திசைவாக இருக்கிறது. நவீன தாராளமய தொழிலாளர் சந்தைக்குத் தீனி போடுகிற ஒரு கல்வி முறையை இந்தியாவில் உருவாக்குவதற்கான ஒரு முக்கிய கருவியாக இந்த ஆய்வு வந்துள்ளது.

கடந்த 50 ஆண்டுகளில், அகில இந்திய கல்வி ஆய்வு (AIES) முதலில் 1960ஆம் ஆண்டிலும், கடைசியாக 2009ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டது. கல்விக் கொள்கை தொடர்பான விவாதங்களில் அந்த ஆய்வு இலக்கு சார்ந்த முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. ஆறாவது ஆய்வு வரையில் அது AIES என்றே குறிப்பிடப்பட்டு வந்தது. பின்னர் அது அகில இந்திய பள்ளிக் கல்வி ஆய்வு (AISES) என்று மாற்றப்பட்டது.

மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் ஏற்பாட்டில் அதன் நிதியுதவியோடு மேற்கொள்ளப்படும் இந்த AISES ஆய்வு, மாறுபட்ட பண்பாடுகளைக் கொண்ட, மாணவர்களும் பள்ளிகளும் தேசிய இனங்களும் ஒரேவிதமான பாட முறை என்ற புறாக் கூண்டுகளுக்குள் அடைக்கப்படுவதை உறுதிப்படுத்துகிற ஒரு முக்கியக் கருவியாக மாறியுள்ளது. இதேபோன்ற நிறுவன அமைப்புகள் சர்வதேச அளவிலும் செயல்படுகின்றன. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (OECD) நடத்துகிற சர்வதேச மாணவ மதிப்பீட்டுத் திட்டம் (PISA) அவற்றுள் முக்கியமானதாகும். 70க்கும் மேற்பட்ட நாடுகளில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை PISA ஆய்வு நடத்தப்படுகிறது. உலக அளவிலான கல்வி முறையை மதிப்பிடுவதற்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அதில், 15 வயது மாணவர்களின் திறமைகளும், அறிவும் பரிசீலிக்கப்படுகின்றன. OECD ஒரு பொருளாதார அமைப்பு. அதில், 34 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஆயினும், PISA ஆய்வு உலக அளவிலான கல்வி நிர்வாக முறைகளை மதிப்பிடுகிற ஒரு நடுவர் என்ற ஒரு புதிய பாத்திரத்தை வகிக்கிறது. அதேநேரத்தில், உலகத்தின் பள்ளிக் கல்வி முறைக்கு மருத்துவ பரிசோதகர், நீதிபதி, கொள்கை ஆலோசகர் என்ற பாத்திரங்களையும் வகிக்கிறது. இதேபோன்ற பள்ளியில்தான் AISES செயல்படுகிறது. அதன்மூலம் OECD அமைப்பில் இந்தியா அங்கம் வகிக்கவில்லை என்பதாலும், PISA ஆய்வில் பங்கேற்கவில்லை என்பதாலும் ஏற்பட்டுள்ள இடைவெளி நிரப்பப்படுகிறது (இந்தியாவில் PISA ஆய்வு 2009ஆம் ஆண்டில் மட்டும் நடத்தப்பட்டது).

**➡ கல்விக் கொள்கை ஆய்வு குறித்து வல்லுநர்களிடமிருந்தோ கொள்கைகளை உருவாக்குகிறவர்களிடமிருந்தோ கருத்து எதுவும் வரவில்லை. வேடிக்கை என்னவென்றால், வெவ்வேறு கல்விக் கொள்கை ஆய்வுகளின் கருத்துகள் மாறுபட்டதாகவே இருக்கின்றன என்பதுதான். ➡**

1960ல் அன்றைய மத்திய கல்வி அமைச்சகத்தால் நடத்தப்பட்ட முதலாவது AIES ஆய்வு முதல், 2009ல் கடைசியாக நடத்தப்பட்ட AISES ஆய்வு வரையில் நாட்டில் கல்விக் கண்ணோட்டத்தில் ஏற்பட்டுள்ள கட்டமைப்பு சார்ந்த மாறுதல்களையும், அந்த ஆய்வுகளின் நோக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களையும் அடையாளப்படுத்துகின்றன. 1960ல் மேற்கொள்ளப்பட்ட முதல் கல்வி ஆய்வுக்கு பின்வரும் நோக்கங்கள் சொல்லப்பட்டன:

1. மக்களின் ஒவ்வொரு வாழ்விடத்தையும், ஒவ்வொரு தொடக்கப் பள்ளியையும் கண்டறிந்து மதிப்பிடுதல்;
2. பள்ளிகளின் இருப்பிடங்கள் குறித்த வரைபடங்களைத் தயாரித்தல்;

3. இயங்கிக்கொண்டிருக்கும் பள்ளிகளின் சேவைப் பரப்பு வரம்பை நீக்குதல்;
4. புதிய பள்ளிகளுக்கான வசதியான இடங்களையும், அந்த புதிய பள்ளிகளின் சேவை எட்டக்கூடிய பகுதிகளையும் முடிவு செய்தல்; அதற்காக குடியிருப்புப் பகுதிகளைப் பொருத்தமாக வரையறுத்தல், உரிய பிரிவுகளில் சேர்த்தல்;
5. ஆய்வின் முடிவுகளைக் காட்டும் வகையில் மாவட்ட வாரியான புள்ளிவிவர அட்டவணைகளைத் தயாரித்தல்.

**2009ல் மேற்கொள்ளப்பட்ட 8வது கல்வி ஆய்வு, கட்டமைப்புரீதியான மாற்றங்களைக் காட்டியது. அதன் நோக்கங்களாக அறிவிக்கப்பட்டவை வருமாறு:**

1. பள்ளிகளுடனான தொடர்பு வசதி, மாணவர் சேர்க்கை, மாணவர்கள் தக்கவைப்பு, பள்ளி நடைமுறைகளில் பங்கேற்பு, சாதனைகள் ஆகியவை தொடர்பாக பல்வேறு மட்டங்களில் உள்ள தற்போதைய பள்ளிக் கல்வி நிலையை விவரித்தல்;
2. கல்வி மேம்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை மதிப்பிடுதல்; கொள்கைகள், திட்டங்கள், திட்டத் தலையீடுகள் ஆகியவற்றின் வெற்றிகளை மறைமுகமாக மதிப்பிடுதல்; அதற்காக கடந்த காலத்தில் கல்விநிலையைக் காட்டும் குறியீடுகளின் மதிப்புகளில் ஏற்பட்ட மாற்றங்களின் திசை, அளவு ஆகியவற்றைப் பின்தொடர்தல்;
3. கல்வி வாய்ப்புகளிலும், சாதனைகளிலும் உரிய மட்டங்களில், கல்விமுறையைச் சார்ந்துள்ள மக்களிடையே நிலவும் சமநிலையை மதிப்பிடுதல்; ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காக நிர்வாக அமைப்புகளைச் சேர்ந்தோராலும், கொள்கையை உருவாக்குவோராலும், ஆய்வாளர்களாலும் செய்யப்பட வேண்டிய தலையீடுகளை மதிப்பிடுதல்.

அரசமைப்பு சாசனத்தின் சட்ட உரை 45ல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச, கட்டாயக் கல்வி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த உறுதிமொழியுடன் நேரடித் தொடர்புள்ளவையாக முதல் கல்வி ஆய்வின் நோக்கங்கள் உள்ளன. முதல் கல்வி ஆய்வின் சாராம்சமாக முன்வைக்கப்பட்டது இலவச, கட்டாயக் கல்விதான் என்பதிலும், அதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கை திசைக்காக அடிப்படைகளை அந்த ஆய்வு முன்மொழிந்தது என்பதிலும் வியப்பில்லை. 50 ஆண்டுகளுக்குப் பிறகு 8வது கல்விக் கொள்கை ஆய்வு, "தரம் மற்றும் சாதனை" என்பதற்கு அழுத்தம் தருகிறது. அதில் வலியுறுத்தப்படுகிற மற்றொரு முன்னுரிமை அம்சம் "தணிக்கை மற்றும் கடமைப் பொறுப்பு" என்பதாகும்.

கல்விக் கொள்கை ஆய்வு குறித்து வல்லுநர்களிடமிருந்தோ கொள்கைகளை உருவாக்குகிறவர்களிடமிருந்தோ கருத்து எதுவும் வரவில்லை. வேடிக்கை என்னவென்றால், வெவ்வேறு கல்விக் கொள்கை ஆய்வுகளின் கருத்துகள் மாறுபட்டதாக இருக்கின்றன என்பதுதான். இரண்டாவது (1967), மூன்றாவது (1979), நான்காவது (1980) கல்விக் கொள்கை ஆய்வுகள் (AIES) ஐந்தாண்டுத் திட்ட முன்முயற்சிகளை வரையறுப்பதற்கு ஆதரவாக அமைந்தன. மேலும், கல்விசார்ந்த திட்டமிடலுக்கும், நிர்வாக ஏற்பாடுகளுக்கும் தேவைப்படுகிற முக்கியத் தகவல்களை அளிப்பதாக கல்விக் கொள்கை ஆய்வு (ஐந்தாவது ஆய்வு –1990) பார்க்கப்பட்டது. அனைவருக்கும் கல்வி என்ற அரசமைப்பு சாசன லட்சியத்தை நிறைவேற்றுவதற்கான நாட்டின் திறனை உறுதிப்படுத்துவதற்கு ஒரு முக்கிய ஆதாரமாகவும் கல்விக் கொள்கை ஆய்வு எடுத்துக்கொள்ளப்பட்டது (ஆறாவது ஆய்வு –1999). சிறிய அளவிலும், பெரிய அளவிலும் பள்ளிக் கல்வியைத் திட்டமிடுவதற்கு முக்கியப் பங்களிப்பு வழங்கக் கூடியதாக, கல்வி சார்ந்த புள்ளி விவரங்களை அளிக்கக்கூடிய ஒரு முக்கியத் தகவல் ஆதாரமாக பள்ளிக் கல்வி ஆய்வு (7வது AISES – 2006) அமைந்தது. இறுதியாக 8வது AISES வழிகாட்டல்களில், "பள்ளிகளை மிகவும் கவர்ச்சிகரமானதாக, தரமான கல்வியை வழங்கக்கூடியதாக மாற்றுவதற்கான வழிகள் முன்வைக்கப்பட்டுள்ளன," என்று கூறப்பட்டுள்ளது (8வது AISES வழிகாட்டல்கள்– 2009).

இந்த ஆய்வு முடிவுகள் எவ்வளவு தூரம் செல்லுபடியாகக்கூடியவை, நம்பகத்தன்மை வாய்ந்தவை என்பது பற்றிய ஆழ்ந்த சந்தேகங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. AISES பற்றிய தீவிரமான ஆய்வுகள் நடத்தப்பட்டதா என்பதைக் கண்டறிவது கடினம். ஆகவே, அதே ஆய்வுகளைத்தான் நாம் நாட

வேண்டியிருக்கிறது. ஒரு ஆய்வில் உள்ளகுறைபாடுகள் அதற்கு அடுத்த ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்படுகின்றன. உதாரணமாக, முதல் ஆய்வின் முடிவுகளில் ஒரு பகுதி நடைமுறைப்படுத்த இயலாதது என்று இரண்டாவது ஆய்வு விமர்சிக்கிறது. நான்காவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் கல்வி வசதிகளை ஏற்படுத்துவதற்கான நிதி ஏற்பாடுகளை திட்டமிடுகிற நோக்கத்திற்கு அது உதவுவதாக இல்லை என்றும் இரண்டாவது ஆய்வு (இரண்டாவது AIES –1967:1) கூறுகிறது. முதல் ஆய்வும் இரண்டாவது ஆய்வும் பல்வேறு விஷயங்களை விரிவாக ஆராயவில்லை என்று மூன்றாவது AIES (1979) விமர்சிக்கிறது. அந்த இரண்டு ஆய்வுகளும் விரிவாக இல்லை AIES கூறுகிறபோது, அது அளவுக்கு மேல் விரிவாக இருக்கிறது என்றும், மிதமிஞ்சிய தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் நான்காவது AIES (1980) சொல்கிறது.

மூன்றாவது ஆய்வில் குறிப்பான தகவல்களைச் சேகரிப்பதற்கு அதிக அழுத்தம் தரப்பட்டிருக்கிறது என்றும் அதன் பரப்பும் கூர்மையான கவனமும் சுருக்கப்பட்டுவிட்டது என்றும் அதற்கடுத்த ஆய்வு சொன்னது. ஆய்வுக்கான அடிப்படை நடைமுறைகள் நான்காவது ஆய்வில் கடைப்பிடிக்கப்படவில்லை என்று ஐந்தாவது AIES (1990:4) கூறுகிறது. முந்தைய ஆய்வுகள் அனைத்திலும் நிறுவனக் கட்டமைப்புகள் போதிய அளவுக்கு இல்லை என்றும், துல்லியமான, தெளிவான முடிவுகளை எட்டுவதற்கான கணினிசார் கருவிகள் பயன்படுத்தப்படவில்லை என்றும் ஆறாவது AIES (1999) கூறியது.

இந்தியாவில் ஒரு தேசிய அளவிலான ஆய்வினை மேற்கொள்ளக்கூடிய எந்த ஒரு அமைப்பும் அதன் சொந்த பண்பாட்டு நடுநிலைத்தன்மையையும் பிரதேசம் சார்ந்த நடுநிலைத்தன்மையையும் விமர்சனக் கண்ணோட்டத்தோடு பரிசீலித்துக்கொள்ள வேண்டும். புதுதில்லியில் அமைந்துள்ள தேசிய கல்வி ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT) ஒரு தேசிய அமைப்பின் பண்பாட்டு–பிரதேச நடுநிலைத்தன்மைப் பற்றிய கேள்விகள் எழவே செய்யும். சமூகம், பொருளாதாரம், பண்பாடு, அதிகாரம் சார்ந்த உறவு நிலைகள் ஒன்றுக்கொன்று பெருமளவுக்கு வேறுபடுகிற மாநிலங்களில் இந்த நிறுவனம் ஒரே விதமான ''ஆய்வு முறைகளைத்தான்'' பயன்படுத்தப்படுகிறது.

முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய மற்றொரு விஷயம் NCERT அமைப்பில் உள்ள கல்வியாளர்கள் குழுவைச் சேர்ந்தவர்கள் கோட்பாட்டளர்கள்தானேயன்றி நேரடியாக ஆசிரியர் பணியில் ஈடுபடுகிறவர்கள் அல்ல. அவர்கள், நம்பகத்தன்மை என்ற பெயரால், தேசிய அளவில் முறைமைப்படுத்துகிற ஒரு வேலையைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்கிறார்கள். மேலும், நாட்டில் மத்திய அரசின் நிதியுதவியோடு செயல்படுகிற பள்ளிகள் முதல் மாநில அரசின் நிதியுதவி பெறுகிற பள்ளிகள் வரை இருக்கின்றன. அதேபோல், அரசுப் பள்ளிகளும், அரசு உதவி பெறும் பள்ளிகளும் தனியார் பள்ளிகளும் உள்ளன. இத்தகைய மாறுபட்ட கல்வி நிறுவனங்கள் உள்ள சூழலில் அவை ஒரே விதமான தொழில்முறைத் தர நிலைகளைப் பராமரிப்பது குறித்து NCERT நிறுவனத்தால் எந்த அளவிற்கு முன்மொழிவுகளை அளித்து, கண்காணிக்க முடியும் என்பது நிச்சயமற்றதாக இருக்கிறது.

**''தொழில்'' சந்தை சக்திகளோடு இணைந்து செயல்படுகிறது. செயல்திறன் என்ற கொள்கையை இந்த நிறுவனங்கள் விசுவாசமாகப் பின்பற்றுகின்றன. சந்தை சக்திகள் தங்களது இயல்பிலேயே சர்வதேசத் தன்மையுள்ளதாக இருப்பதால், இந்திய பள்ளிக் கல்வி முறை கடமைப் பொறுப்பு என்ற கட்டாயத்திற்கு உள்ளாகிறது. அந்தக் கட்டாயமும், நிர்வாக முறை என்பதும் லாபத்தையே மூலாதாரமாகக் கொண்டுள்ளன.**

மேலே கூறிய ஒவ்வொரு அம்சமும் ஆழ்ந்த அக்கறைக்கும் உடனடி கவனத்திற்கும் உரியவையே. ஆயினும், இந்தக் கட்டுரையில், நவீன தாராளமய பொருளாதாரத்திற்கும் அதனோடு இணைந்து வருகிற தொழிலாளர் சந்தைக்கும் உள்ள தேவைகளை ஈடு செய்யும் வகையில் ஒரு புதிய தேசிய கல்வி மேலாண்மை முறையை உருவாக்குவதில் AISES பங்கு என்ன என்பது குறித்தே ஆராயப்படுகிறது. நவீன தாராள மய தொழிலாளர் சந்தைக்குத் தீனி போடுகிற ஒரு கல்விமுறையை இந்தியாவில் ஏற்படுத்துவதற்கான ஒரு முக்கியக் கருவியாக AISES மாறியுள்ளது.

மூன்றாம் உலக நாடுகளிலிருந்து, குறிப்பான கல்விப் பயனுக்கான தேவைகள் உலகச் சந்தைக்காகத் தேவைப்படுகின்றன. அந்தத் தேவைகளுக்கான ஒரு விரிவான சீர்திருத்த நடவடிக்கைகளின் ஒரு

முன்னறிவிப்பாக AISES ஆய்வுகளை புரிந்து கொள்ளலாம்.

1992ல் புதிய பொருளதாரக் கொள்கை, கல்வித் துறையில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் அவற்றின் பயன் விளைவு என்ன என்பதைப் பொறுத்தே மதிப்பிடப்படுகின்றன. தேசிய அளவிலான ஒவ்வொரு கல்வித் திட்டத்திற்கும் பெரும் நிதி முதலீடு செய்யப்படுகிறது. ஆகவே, அத்தகைய ஒவ்வொரு திட்டத்திற்கும் தீவிரமான தணிக்கைத் தேவைப்படுகிறது. உதாரணமாக, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக் கட்டத்தில் தொடங்கப்பட்ட (2001 – 02) சர்வ சிக்ஷா அபியான் (SSA) திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவான தொகை மொத்தம் ரூ. 500 கோடி. பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2002 –07) தொடக்க நிலை திட்ட ஒதுக்கீடு ரூ.17,000 கோடி. பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–12). இது ரூ.71,000 கோடியைத் தொட்டது. நிதி ஒதுக்கீட்டில் ஏற்பட்ட இந்த அதிகரிப்பு, பொருளாதாரத் தணிக்கை என்ற பரிசீலனைக்கான ஒரு மிக முக்கிய திட்டமாக SSA திட்டத்தை மாற்றியுள்ளது.

இதனால், பொதுப்பள்ளிகள் பதிலளிக்கக் கடமைப்பட்டதாகவும் செயல்திறன் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்ற கட்டாயமான பாதுகாப்பிலிருந்து விடுபட்டுவிட்டன என்பதுதான் கண்கூடாகத் தெரிகிறது. செயல்திறன், கடமைப் பொறுப்புகள் போன்ற தேவைகளைப் பொறுத்தவரை அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கல்விமுறை உரிய தொழில் நேர்த்தியோடு இல்லை என்பதால், அரசாங்கம் இவ்வாறு தனது பொறுப்பில் இருந்து விலகிக்கொண்ட நிலையில் அந்த இடத்தை, லாப நோக்குள்ள அமைப்புகள் நிரப்புகின்றன (வீட்டு வசதி, மருத்துவம் போன்றவற்றிலும் இதே நிலைமைதான்). அந்த நிறுவனங்கள் சிறப்பாக வரையறுக்கப்பட்ட நிர்வாகக் கொள்கைகளையும், வழிமுறைகளையும் கொண்டுள்ளன. லாபத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வித் ‘‘தொழில்’’ சந்தை சக்திகளோடு இணைந்து செயல்படுகிறது. செயல்திறன் என்ற கொள்கையை இந்த நிறுவனங்கள் விசுவாசமாகப் பின்பற்றுகின்றன. சந்தை சக்திகள் தங்களது இயல்பிலேயே சர்வதேசத் தன்மையுள்ளதாக இருப்பதால், இந்திய பள்ளிக் கல்வி முறை கடமைப் பொறுப்பு என்ற கட்டாயத்திற்கு உள்ளாகிறது. அந்தக் கட்டாயமும், நிர்வாக முறை என்பதும் லாபத்தையே மூலாதாரமாகக் கொண்டுள்ளன. இது கல்விமுறையில், அரசாங்கத்தின் கட்டுப்பாடு தளர்வதற்கு இட்டுச் சென்றுள்ளது. அந்த இடத்தை உலகளாவிய சக்திகள் பிடித்துக்கொண்டுள்ளன. உலகளாவிய சந்தை சக்திகள் தனிப்பட்ட தனியார் தொழில் முனைப்புகளை மூடி மறைக்கின்றன. அதற்கு தங்களது வலுவான, வல்லமை மிக்கக் கொள்கைகளைப் பயன்படுத்துகின்றன.

இந்தக் கொள்கைகள் வளரும் நாடுகளில் உள்ள, குறிப்பாக இந்தியாவில் உள்ள, கல்வி நிறுவனங்களை உழைப்புச் சந்தைக்கான தொழிலாளர்களை உற்பத்தி செய்யும் திறமையுள்ளவர்களைக் கொண்டவையாக செயல்பட வைக்கின்றன. உலகச் சந்தை சுமூகமாகச் செயல்படுவதற்கு ஏற்ப அந்த உழைப்புச் சந்தை உருவாக்கப்படுகின்றது. ஆக கல்வியின் நோக்கம் என்பதே தேசக் கட்டுமானம், குடிமைப் பயிற்சி, வளர்ச்சி ஆகியவற்றுக்கு மாறாக, ‘‘வேலை செய்யும் தகுதி’’ என்பதாக தவிர்க்க இயலாதபடி மாறிவிட்டது.

1957ல் மேற்கொள்ளப்பட்ட முதல் AIES ஆய்வு அனைவருக்கும் கட்டாயக் கல்வி என்ற அரசமைப்பு சாசன லட்சியத்திற்கு ஆதரவாக இருந்தது. ஆனால், அது ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான புள்ளிவிவரப் பின்புலமாக மாறியது. அதன் விளைவுகள் ஊக்கமளிப்பதாக இல்லை என்பது, ‘‘எல்லோருக்கும் கல்வி’’ வழங்குவதற்கான நமது முயற்சிகள் இன்னும் தொடர்கின்றன என்பதிலிருந்தே தெரிகிறது. அனைத்து மதிப்பீட்டு ஆய்வுகளும் மாணவர்களின் திறன்களை ‘‘சிறப்பு,’’ ‘‘சராசரி,’’ ‘‘மோசம்’’ என்று வகைப்படுத்துவதாகவே உள்ளன.

இவ்வாறு வகைப்படுத்துவதன் பின்னணியில் உள்ள நோக்கம் என்ன ‘‘சராசரி’’ என்றும் ‘‘மோசம்’’ என்றும் வகைப்படுத்தும் மாணவர்களுக்கு ஆதரவாக இருப்பதுதான் நோக்கமா? அதுதான் நோக்கம் என்றால் நமக்கு அதிகமாகத் தேவைப்படுவது வழக்கமான போதனா முறையைக் கொண்ட கல்வி நிறுவனங்கள் அல்ல, மாறாக, குறைபாடுகளை சரிப்படுத்துகிற அணுகுமுறை கொண்ட கல்வி நிறுவனங்கள்தான்.

இது இன்னும் நிறைவேறவில்லை என்கிறபோது இந்த ஆய்வுகளால் என்ன பயன்? நவீன தாராளமய தடபுடல்கள், உலகச் சந்தை நிலவரங்கள் என்ற சூழலில் இது குறித்து விவாதிக்கப்பட்டாக வேண்டும். இன்றைய சூழலில், கடந்த ஐம்பது ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள தேசிய பள்ளிக் கல்வி ஆய்வுகள் உலக சந்தை சக்திகளுக்குத்தான் உதவிகரமாக அமைந்துள்ளனவேயன்றி இந்தியாவின் இளைய சமுதாயத்திற்கு அல்ல.

**ஆதாரம்: எகனாமிக் & பொலிடிகல் வீக்லி, 7 மே 2016**

# கல்வியில் புத்தொளி

*- சந்தீப் பாண்டே*

மும்பையில் உள்ள செம்பூர் என்னும் இடத்தில் உள்ள குடிசைப் பகுதியில் வாழும் வீட்டு வேலை செய்யும் கணவனை இழந்த ரீட்டா கனோஜியா, தனது மகன் திலக் நகரில் உள்ள லொகமான்ய திலக் உயர்நிலைப் பள்ளியில் ஜூனியர் கிண்டர் கார்டன் (Jr.K.G) வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்று ஆசைப்படுகிறார். அவருடைய இரண்டு பெண்கள் ஏற்கனவே அந்தப் பள்ளியில் 3ம் வகுப்பும் 4ம் வகுப்பும் படிக்கின்றனர். அவர் பள்ளிக்கு 19,500 ரூபாய் கட்டணமாகக் கட்ட வேண்டும் என்று பள்ளி விரும்பியது. அவரது கணவர் 2014ம் ஆண்டில் புற்றுநோயின் காரணமாக இறந்தபிறகு அவரால் இந்தப் பணத்தைக் கட்ட முடியவில்லை. அவர் நீதிமன்றத்துக்குச் சென்றார். நீதிமன்றத்தின் தலையீட்டால் பள்ளி அவருக்கு தள்ளுபடி அளித்தது. நீதிமன்றத் தலையீட்டுக்குப் பிறகும் ரூபாய் 10,500 கட்டவேண்டும் என்று பள்ளி வலியுறுத்தியது. கட்டணத்தை தவணைமுறையில் கட்ட ரீட்டா ஒப்புக்கொண்டார். ஆனால் அதற்கு பள்ளி ஒப்புக்கொள்ளவில்லை. நீதிபதி V.M. கனடேயும் M.S. சோனக்கும் பள்ளிக் கட்டணம் முழுவதையும் ஒரே சமயத்தில் கட்ட முடியாத ஒரு தாயின் இயலாமையின் காரணமாக மட்டும் ஒரு குழந்தைக்கு கல்வியை மறுக்கக்கூடாது என பள்ளியைக் கேட்டுக்கொண்டனர். நீதிபதி கானடே அந்தக் குழந்தைக்கான பள்ளிக் கட்டணத்தை தானே கட்டுவதாகக் கூட கூறினார்.

2011ம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்ட ஆட்சியர், A. ஆனந்தகுமார், அவரது மகள், A. கோபிகாவை குமிலன்குட்டாய் என்ற ஊரில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் தமிழ் வழிக் கல்வியில் சேர்த்தார். அவரது மகள் பள்ளியில் அளிக்கப்படும் மதிய உணவை பிற குழந்தைகளோடு சேர்ந்து சாப்பிடுவாள் என்றும் மாவட்ட ஆட்சியர் மகள் என்று எந்த தனித்துவமான கவனிப்பும் தனது மகளிடம் காட்டக்கூடாது என்றும் பள்ளி தலைமை ஆசிரியரிடம் தெரிவித்தார். அதன் பின்னர் அந்தப் பள்ளியின் கழிப்பறை ஒரு நாளுக்கு இரண்டு முறை சுத்தம் செய்யப்பட்டது. பள்ளி வளாகம் சுத்தமாக இருப்பதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. மிக முக்கியமாக, ஆசிரியைகள் நேரம் தவறாமல் பள்ளிக்கு வந்தனர். இது, மூத்த அரசாங்க அதிகாரிகளின் குழந்தைகள் அரசுப்பள்ளியில் சேர்க்கப்பட்டால் என்ன மாற்றம் வரும் என்பதைக் காட்டுகிறது.

2016 ஜூன் மாதம் 6ம் தேதிமுதல் 15 வரை லக்னோவின் ஹஸ்ராத் கஞ்ச் எனும் இடத்தில் உள்ள காந்தி சிலை அருகே, அரசாங்க ஊதியம் பெறும் அனைவரின் குழந்தைகளும் அரசுப் பள்ளியில் கட்டாயம் படிக்க வேண்டும் என்ற அலகாபாத் நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைக்காக உண்ணாவிரதம் இருந்தேன். அப்போது சீதாபூர் மாவட்டத்துக்கு அருகே உள்ள மிஷ்ரிக் பகுதியைச் சேர்ந்த நக்கிமாதியா கிராமத்திலிருந்து வந்த லக்னோவில் ரிக்ஷா இழுக்கும் ரமேஷ் என்பவர், உண்ணாவிரதப் போராட்டத்துக்கு தனது ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் தினமும் வருவார். சில தினங்கள் பலமணி நேரங்கள் உண்ணாவிரதப் பந்தலில் உட்கார்ந்திருப்பார். சமீபத்தில், எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். ஏழை மக்களோடு சேர்ந்து ஒருநாள் உணவு உண்டு ஆனால் தனது குழந்தைகளை ஏழை மக்கள் படிக்கும் பள்ளிக்கு அனுப்புவதை மறுக்கும் மாநில முதல்வரா? அல்லது ஏழை மற்றும் பணக்கார குழந்தைகள் ஒன்றாக ஒரே பள்ளியில் படிக்க வேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருப்பவர்களா? – யார் தனக்கு முக்கியம் என்பதை மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் இருந்தது. எனது சமீபத்திய, இயக்கம் தொடர்பாக, நான் அடைந்த பாராட்டில் இது மிக முக்கியமானது. இப்போது மேற்குறிப்பிட்ட நோக்கத்துக்காக பிரச்சாரம் செய்பவராக ரமேஷ் மாறிவிட்டார். அவரது ரிக்ஷாவில் இது குறித்த வாசகம் அடங்கிய ஒரு அட்டையைத் தொங்கவிட்டிருக்கிறார், துண்டறிக்கைகளை விநியோகிக்கிறார்.

வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் நலிவடைந்த பிரிவினைச் சேர்ந்த குழந்தைகளுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள அவர்களுக்கு விருப்பமான ஒரு பள்ளியில் 25 சதவீதம் வரை அந்தப் பள்ளியில் உள்ள முதல் வகுப்பிலும் தொடர்ந்து ஒன்றாம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை இலவச கல்வியைப் பெறுவதற்கான உரிமை உண்டு என்ற கல்வி உரிமைச் சட்டம் 2009ன் பிரிவுகளைப் பற்றியும் ரமேஷ் தனது சக கிராமவாசிகளிடம் தகவல் தெரிவிக்கிறார். எனது

பக்கத்து வீட்டார் இருவர், வீட்டுக்கு இரண்டு பக்கமும் இருப்பவர்கள், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி அவர்களது வீட்டில் வேலை செய்யும் நபர்களின் சார்பாக பள்ளிகளில் விண்ணப்பம் அளித்துள்ளனர்.

61 வயதாகும் ரஜனி சக்சேனா என்பவர் லக்னோவில் இந்திரா நகர் பகுதியில் A-895 என்ற எண் கொண்ட வீட்டில் வசிக்கிறார். அவரது வீட்டில் வேலை செய்யும் பணியாளரான, நக்மா, அவரது வீட்டில் கடந்த 20 வருடங்களாக வசிக்கிறார். நக்மாவுக்கு படிப்பதில் மிகுந்த ஆர்வம். மெதுவாக அவர் ஆங்கிலம் படிக்கக் கூட கற்றுக்கொண்டார். ராஜு என்பவரைத் திருமணம் செய்து கொண்டு முதல் குழந்தை பிறந்தவுடன் மொஹமத் இம்ரான் எனும் தனது மகனுக்கு தரமான கல்வியைத் தருவதைப் பற்றிய கவலையில் ஆழ்ந்தார். அவரது கணவருக்கு அதைப்பற்றிய கவலை கொஞ்சம் கூட இல்லை. இம்ரான் டாபிள் அகாடாமி என்னும் பள்ளியில் சேர்க்கப்பட்டான். அங்கு அவனுக்கு மாதக் கட்டணம் ரூபாய் 1250.

நக்மாவின் மாதச் சம்பளம் வெறும் 4000 ரூபாய் தான். அவ்வாறான நிலையில் அவர் அவனது படிப்பையும் வீட்டையும் கவனித்துக் கொள்ள எவ்வளவு போராடினார் என்பதை ஒருவர் எளிதாக கற்பனை செய்துபார்க்கலாம். ரஜனி சக்சேனா கல்வி உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்த எண்ணினார். அதன் மூலம் இம்ரான் அதே பள்ளியிலேயே 8ம் வகுப்பு வரை இலவசமாக தனது படிப்பைத் தொடர முடியும் என்பதால் அவ்வாறு எண்ணினார். தனது வருவாய் மற்றும் சாதி சான்றிதழை பெறுவதற்கான விண்ணப்பபடிவத்தை மாவட்ட நடுவர் மன்ற அலுவலகத்தில் அளிக்கவேண்டும் என்று நக்மாவை ரஜனி வழி நடத்தினார். அந்த அலுவலகத்துக்கு நக்மா நான்கு முறை வரைவைழைக்கப்பட்டு அலைக்கழிக்கப் பட்டார். பின்னர் ரசீது கொடுக்கப்பட்டது. அதன் பிறகு 2016 ஜூன் 23 அன்று பிரவீன் மணி திரிபாதி என்கிற லக்னோவின் அடிப்படைக் கல்வி அதிகாரியிடம் ரஜனி சக்சேனா, இம்ரானின் விண்ணப்படிவத்தை தானே நேரில் சென்று அளித்தார். குருகுல் அகாடமி, புனித டாமினிக், நகர மாண்டிசோரி பள்ளி மற்றும் டாபிள் அகாடமி ஆகிய பள்ளிகள் இம்ரான் தனது படிப்பைத் தொடர தேர்வு செய்ய விரும்பும் பள்ளிகள் பட்டியலாக அளிக்கப்பட்டன.

யாஸ்மின் மஹமத் என்பவர் லக்னோவில் இந்திரா நகர் பகுதியில் A-885 என்ற எண் கொண்ட வீட்டில் வசிக்கிறார். அவரது வீட்டில் கடந்த சில ஆண்டுகளாக பணி புரியும் பணியாளரான 27 வயது ஜம்ருல் நிஷா அவரின் முதல் குழந்தை, ஜூலேக்காபானு பிறந்ததிலிருந்து அவரது கணவரைப் பிரிந்து வாழ்கிறார். ஜம்ருல்பானு லக்னோவுக்கு அருகில் உள்ள பராபன்கி மாவட்டத்தில் உள்ள பட்டுபூர் என்ற ஊரிலிருந்து வந்தவர். ஜூலேக்காவுக்கு இப்போது 7 வயது, அவளின் கல்வி குறித்து மிகுந்த கவலை ஜம்ருல்லுக்கு. 66 வயதான யாஸ்மின் மொகமத், இந்திய ரயில்வே அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற தனது கணவரை சமீபத்தில்தான் இழந்திருந்தார். அவர் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் அருகாமையில் உள்ள ஏதேனும் ஒரு பள்ளியில் ஜூலேக்காவை சேர்ப்பதற்கான முன்முயற்சியை எடுக்க முடிவு செய்தார். அவர், தனது மருமகளான தன்சீன் மகமதுவை ஜம்ருல்பானுவுடன் அவரது வருமானம் மற்றும் இருப்பிடச் சான்றுகளைப் பெறுவதற்கான படிவங்களை அளிப்பதற்கு துணையாகப் போகச் சொன்னார். தன்சீன் மகமது, கட்டிடக்கலை குறித்த ஆலோசகர் மற்றும் மென் திறன்கள் பற்றி பயிற்சி எடுப்பவர். ஜூலேக்காவின் படிவமும் அதே தினமான ஜூலை 23 அன்று அடிப்படைக் கல்வி அதிகாரியிடம் கொடுக்கப்பட்டது. ஸ்பிரிங்டேல் பள்ளி, நகர மாண்டிசோரி பள்ளி, நகர சர்வதேசப் பள்ளி, குருகுல் அகாடமி, ஆகிய பள்ளிகள் ஜூலேக்கா தனது படிப்பைத் தொடர தேர்வு செய்ய விரும்பும் பள்ளிகள் பட்டியலாக அளிக்கப்பட்டன.

மாவட்ட கல்வி அதிகாரி, குழந்தைகளுக்கு ஆதரவாக, ஒரு முடிவை எடுத்தால், குழந்தைகள் அவர்களுக்கு அருகாமையில் உள்ள சிறந்த பள்ளிகளில் படிப்பார்கள். நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து நடந்த பல்வேறு சம்பவங்களில் உத்வேகமூட்டக்கூடிய உதாரணங்கள் இவை. கல்வியை நோக்கிய தனது சிந்தனையில் நாடு செல்லக்கூடிய மாற்றத்தின் விளக்கமே இது. ஒருபக்கம், ஏழை மக்கள் தமது குழந்தைகளின் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்டனர்.

பணக்கார வர்க்கம், ஒரு வழியாக, அவர்களின் குழந்தைகள் பெறும் கல்வியைப் பெற ஏழைக் குழந்தைகளும் தகுதி படைத்தவர்கள் என்ற உண்மையை ஒப்புக்கொண்டுள்ளனர். சில சாதாரண இல்லத்தரசிகள் அவர்களது வீட்டில் வேலை செய்யும் பணியாளர்களின் குழந்தைகள் நல்ல பள்ளிகளில் சேர்க்கப்படுவதற்கு தன் முனைப்புடன் செயல்படுகின்றனர் என்பதைப் பார்க்கும்போது மனது நிறைவாக இருக்கிறது. இவ்வாறு செய்வதால், இத்தகைய வீட்டுவேலை செய்யும் பெண்களின் குழந்தைகள் வறுமை என்னும் மாயவட்டத்தை உடைத்து அவர்களின் வாழ்வில் வீட்டு வேலை இல்லாமல் வேறு ஏதாவது உருப்படியான வேலையை செய்ய முடியும். பொதுப்பள்ளி முறையை

அமல்படுத்தும் பிரச்சனையில் சட்டமன்றம் அல்லது நிர்வாகம் தலையிட்டால் நீதித்துறைக்கு ஒரு முக்கியப் பங்கு இருக்கிறது என்றும் இந்த சமயத்தில் தோன்றுகிறது.


முனைவர் சந்தீப் பாண்டே ஒரு முக்கிய சமூக செயற்பாட்டாளர், மகசேசே விருது பெற்றவர். இவர் வாரானாசியில் உள்ள ஐஐடி – பிஎச்யூ பல்கலைக்கழகத்தில் வருகை தரும் பேராசிரியர். அவர் ஒரு ‘நக்சலைட்’, ‘தேச விரோத’ செயல்களில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டு பணியிலிருந்து சமீபத்தில் இந்த ஆண்டு நீக்கப்பட்டார். 2011 மே மாதம் 28–29 தேதிகளில் ஐதாராபாத்தில் நடைபெற்ற சோசலிசக் கட்சி (இந்தியா)யின் துவக்க மாநாட்டில் அதன் துணை தலைவராக பேராசிரியர் கேசவ் ஜாதவோடு இணைந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**ஆதாரம்: Mainstream, July 16, 2016**

## விரும்பி ஏற்ற வேலையல்ல!

**வறுமை, தரமான பள்ளிகளின் தட்டுப்பாடு மற்றும் முறையற்ற பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் விளைவே குழந்தை தொழிலாளர்கள்**

**கடந்த மூன்று ஆண்டுகளில் குழந்தைத் தொழிலாளர் முறையிலிருந்து மீட்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை.**




– டிசம்பர் 31, 2015 வரை

**இந்நாட்டின் சமூகக் கட்டமைப்பு மற்றும் சமூகப் பொருளாதார நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இத்தகைய உதவி (குழந்தை தொழிலாளர் முறை) முன்மொழியப்பட்டுள்ள திருத்தத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது .**

**– பண்டாரு தத்தாத்திரியா**
(தொழிலாளர் துறை அமைச்சர், 21/12/2015 பாராளுமன்ற உரை)



தமிழ்நாட்டில் **5–14** வயதிற்குட்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை **1,57,437**

# கருவைக் கண்காணிப்பது சாத்தியமா?

– நிகிதா



சரிவான ஒரு பாலின விகிதத்தை மேம்படுத்த இந்தியாவின் முயற்சிகளை சமூக யதார்த்தங்கள் முடக்கினாலும் பாலின தேர்வு சார்ந்த கருக்கலைப்பை கட்டுப்படுத்துவதற்கான திட்டங்கள் முறையான ஆழ்ந்த சிந்தனையுடன் உருவாக்கப்பட வேண்டும்.

இந்தியாவின் படுமோசமான பாலின விகிதம் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்டு ஐந்து வருடங்கள் ஆகிவிட்டது. இது சுதந்திரத்திற்கு பின்னர் அதனுடைய மிக மோசமான விகிதமாகும்: ஆயிரம் ஆண்களுக்கு 943 பெண்கள். கணக்கெடுப்பு நடந்து ஐந்து வருடங்களுக்கு பின்னர், பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தும் தீராத இந்த சமூக முரண்பாடை உள்வாங்கிக் கொள்ள இன்னும் இந்தியா முயற்சிக்கிறது. குளவிக் கூட்டை களைக்கும் விதமாக, மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சர் மேனகா காந்தி பாலினத்தை தெரிந்துக் கொள்வதை கட்டாயமாக்கவும் மற்றும் ஒவ்வொரு கர்ப்பமும் பதிவுச் செய்யப்பட்டு குழந்தை பிறக்கும் நேரம் வரையில் கண்காணிக்கப் பட வேண்டும் என்று சமீபத்தில் பரிந்துரைத்துள்ளார். ஒரு நிகழ்ச்சியின் போது பேசிய மேனகா தன்னுடைய அமைச்சகம் இதுக் குறித்து சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்திடம் ஒரு திட்டத்தை அனுப்பியுள்ளதாக கூறியுள்ளார். அவர்களின் வரம்பின் கீழ் தான் இந்த சட்டம் செயல்படும்.

ஆனால் இந்த திட்டத்தை அவர் உடனடியாக திரும்ப பெற்றுள்ளார். தெஹல்கா இதுக் குறித்து மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தை தொடர்பு கொண்ட போது அந்த சட்டம் (கருவிலே பாலினம் அறியும் செயலுக்கு எதிரான சட்டம்) அவர்களுடைய வரம்பின் கீழ் வராது என்று மேனகாவின் அறிவிப்பை நியாயப்படுத்தியது. பின்னர், ஏன் முறையான ஆழ்ந்த

சிந்தனை இல்லாமல் அவ்வாறு ஒரு அறிவிப்பை செய்தார்?

முதலாவதாக, பாலினத்தை தெரிந்து கொள்ளுதல் மருத்துவ சிக்கலகளால் உருவானால் மட்டுமே தவிர மற்றவற்றிற்கு தடை என்ற நடப்பில் உள்ள சட்டத்தின் (கருவிலே பாலினம் அறியும் செயலுக்கு எதிரான சட்டம்) முதற்கோளை அவருடைய அறிவிப்பு மறுக்கின்றது. அல்ட்ராசவுண்ட் பரிசோதனை தயாராக கிடைப்பதனால் பாலின தேர்வு சார்ந்த கருக்கலைப்பு அதிகரிக்கும் சூழலில் இந்த சட்டம் இயற்றப்பட்டது. '' பாலின தேர்வு சார்ந்த கருக்கலைப்பு பரவலானதற்கு காரணம் அல்ட்ராசவுண்ட் பரிசோதனை பெண் சிசுவை அடையாளம் செய்வதால் ஆண் குழந்தையை விரும்பும் பெற்றோர்கள் கருக்கலைக்க ஆரம்பித்தனர்'' என்று ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவம் மற்றும் சமுதாய சுகாதார பேராசிரியர் மோகன் ராவ் கூறுகிறார். பாலினத்தை தெரிந்துக் கொள்வதை தடைச் செய்வதன் மூலம் இந்த சட்டம் இது போன்ற கருக்கலைத்தலுக்கு உதவிச் செய்யும் மருத்துவப் பயிற்சியாளர்களை முடக்கவும் செய்தது.

மருத்துவ துறையில் உள்ளவர்களுக்கு பலன் தரும் விதமாக இருந்ததால் மேனகாவின் 'திட்டம்' பல்வேறு தரப்புகளிலிருந்து எதிர்ப்பை சந்தித்தது. "இது ஒரு கண்டிக்கத்தக்க அறிவிப்பு. மேனகா பெண்களின் நலனுக்காக அல்ல மருத்துவத் தொழிலின் நலனுக்காக இருக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது,'' என்று ராவ் கூறுகிறார். தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் கருக்கலைப்பு மருத்துவத் துறையில் உள்ளவர்களின் உதவியில்லாமல் செய்ய முடியாது.

மகளிர் அமைப்புகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களின் ஒரு கூட்டமைப்பு பொது தளத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்று மேனகாவின் அறிவிப்பு மருத்துவத் தொழிலாளர்களின் நேர்மையற்ற ஈடுபாட்டை கட்டுப்பாட்டில் வைக்கும் முயற்சிகளை வலுவிழக்கச் செய்வதை சுட்டிக்காட்டுகிறது. "கருவிலே பாலினம் அறியும் செயலுக்கு எதிரான சட்டம் நேர்மையற்ற மருத்துவத் தொழிலாளர்கள் மற்றும் பெருநிறுவன இலாபக்காரர்கள் தொழில்நுட்பத்தை தவறாக பயன்படுத்தி பாலினத் தேர்வை ஒரு இலாபகரமான வணிக செயலாக மாற்றியிருக்கும் முறையை எதிர்க்கொள்வதற்கு குறிப்பாக இயற்றப்பட்டது,'' என்று அதில் கூறப்பட்டுள்ளது.

கர்ப்பத்தின் பொறுப்பை தாயிடம் தள்ளுவது என்பது உண்மையாக மருத்துவ ஸ்தாபனத்தின் பங்கை கண்டுக்கொள்ளாமல் இருப்பதாகும். ''கர்ப்பத்தை கண்காணிப்பது மருத்துவத் துறையை சாதகமாக சிக்கலில் இருந்து வெளியெடுக்கச் செய்யும் மற்றும் இது பெண் சிசுக்கொலையை கண்டிப்பாக அதிகரிக்கச் செய்யும்,'' என்று தெமினா அரோரா கூறுகிறார். இவர் ஒரு வழக்கறிஞர் மற்றும் பாலின தேர்வு சார்ந்த கருக்கலைப்பிற்கு எதிரான போராட்டத்திற்காக தன்னை அர்பணிக்கும் இயக்கமான வெனிஷிங் கெர்ல்ஸின் நிறுவர். மேனகாவின் அறிவிப்பு கருக்கலைப்பு மற்றும் சிசுக்கொலை ஆகியவற்றில் உள்ள பல விவாதங்களை மீண்டும் முன்னுக்கு கொண்டு வருகின்றன. தேசிய செயற்திட்டத்திலிருந்து (1991 – 2000) மிக சமீபத்தில் மத்திய அரசால் வெளியிடப்பட்ட பேட்டி பசோவ் பேட்டி படாவ் (Beti Bachao Beti Padao) திட்டம் வரை அரசு பாலின தேர்வு சார்ந்த கருக்கலைப்பு பிரச்சனையை எதிர்க்கொள்ள முயற்சி செய்துள்ளது. பாலின தேர்வு சார்ந்த கருக்கலைப்பிற்கு எதிரான விழிப்புணர்வை இவை உருவாக்கினாலும், அரசு எந்த அளவிற்கு ஒரு பெண்ணின் சொந்த மற்றும் உயிரின வாழ்க்கையில் தலையிட முடியும் என்பதை கேள்வி கேட்கும் கட்டாயத்திற்கு தள்ளப்படுகிறோம்.

தன்னுடைய அறிவிப்பின் மூலம் பெண்களை மட்டுமே பொறுப்பானவர்கள் என்ற கருத்தை அமைச்சர் மீண்டும் நிலைநாட்டுகிறார். இதன் மூலம் தேர்ந்தெடுத்த கருக்கலைப்பிற்கு தள்ளும் புறம்பான காரணிகளை கவனிக்கத் தவறுகிறார். கூடுதலாக, பெண்களின் சொந்த வாழ்க்கையில் இத்தகைய ஆழ்ந்த தலையீட்டால் அவர்கள் தங்களுக்கான முடிவுகளை எடுத்துக்கொள்ள தகுதியற்றவர்கள் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறது. "பெண்களை கண்காணிப்பது மற்றும் மேற்பார்வையிடுவதை நோக்கி நகர்வதால் மேனகா காந்தியின் அறிவிப்பு ஏற்கமுடியாதது மற்றும் மிகவும் பிரச்சனைக்குரியதாக்குகிறது,'' என்று ஒப்பீட்டு அரசியல் கோட்பாட்டின் பேராசிரியர் மற்றும் பெண்ணியவாதியான நிவேதிதா மேனன் கூறுகிறார்.

மேலும், மேனகாவின் 'திட்டம்' அமலுக்கு வந்தால் கருக்கலைப்பதற்கு பெண்ணிற்கு இருக்கும் உரிமையில் பாதிப்பை உண்டாக்கும். ஒரு பெண்ணிற்கு தன்னுடைய உடலின் மேலுள்ள உரிமையை சார்ந்த முடிவுராத விவாதம் மற்றும் அதனால் அவருக்கு கருக்கலைப்பதா இல்லையாயென்பதில் இருக்கும் தேர்வு ஆகியவற்றிலிருந்து இந்த வாதம் எழுகிறது. இந்த வாதத்தில் உள்ள இன்னொரு தரப்பு சிசுக்கொலையை கருக்கலைப்புடன் ஒன்றுபடுத்துகிறது. கொலைக்கு உயர்த்தும் விதத்தில் சிசுக்கொலை என்ற வார்த்தை

தந்தைக்கொலை மற்றும் தாய்க்கொலை போன்ற சொற்களுடன் ஒத்திருக்கிறது. எனினும், விஷயங்களை சிக்கலாக்குவது என்னவென்றால் ஒரு பெண் தானாகவே பாலின தேர்வு சார்ந்த கருக்கலைப்பை தேர்வு செய்வதாகும்.

மேனகாவின் கருத்திலிருந்து எழும் இன்னொரு பிரச்சனை என்னவென்றால் ஏற்கனவே சமூகத்தில் பாலின பாகுபாட்டின் சுமையை தாங்கும் கர்ப்பிணி பெண்கள் மீது குற்றம் சுமத்தப்படுவதாகும். “பெண் சிசுக்கொலைக்கு எதிரான போராட்டத்தில் அனைத்து தரப்பிலிருந்தும் எதிர்ப்பை சந்தித்துள்ளேன். தன்னுடைய மகள்களை காப்பாற்றுவதற்கு போராட தயாராக இருக்கும் ஒரு பெண்ணுக்கு ஆதரவளிக்கும் ஒழுங்குமுறை எதுவும் இல்லை. அவ்வாறு தயாராக இருக்கும் ஒரு பெண் குற்றவாளியாகவே கருதப்படுவார்,” என்று இரட்டை மகள்களை பெற்றெடுத்ததினால் எதிர்க்கொண்ட வன்முறையில் இருந்து பிழைத்தவர் மற்றும் இந்தியாவில் பாலின தேர்வு சார்ந்த கருக்கலைப்பிற்கு எதிராக போராடும் முக்கிய முகங்களில் ஒருவரான டாக்டர். மிது குரானா கூறுகிறார்.

தங்களுடைய குடும்பங்கள் பெண் குழந்தை வேண்டாம் என்று நினைத்தால் பெண்கள் பெரும்பாலும் கொடுமைப்படுத்தப்படும் ஆபத்துள்ளது என்பது அனைவரும் அறிந்த இரகசியம் மற்றும் பாலின தேர்வு கட்டாயமானால், தனக்கும் தன்னுடைய குழந்தைக்கும் தீங்கான ஒரு விரோத சூழலுக்கு தள்ளப்படுவார். ”பெண் சிசுக்களை சுமக்கும் பெண்கள் பட்டினி போடப்படுவர் மற்றும் தாக்கப்படுவர், மேலும் பெண் குழந்தை என்று உறவினர்கள் அறிந்தால் “தற்செயலான அடுப்பு வெடிப்புகள்” அதிகரிக்கும் என்று குரானா கூறுகிறார். “பெண்கள் பெரும்பாலாக பாலின தேர்வு சார்ந்த கருக்கலைப்பிற்கு கட்டாயமாக தள்ளப்படுகிறார்கள் மற்றும் ஒரு கர்ப்பத்தைக் கண்காணிப்பது அந்த பெண்ணை இன்னும் பாதிக்கப்படக்கூடிய ஒருவராக ஆக்கும் அத்துடன் வீட்டை விட்டு வெளியேற்றப்படும் ஆபத்து இருக்கும்,” என்று அரோரா ஒப்புக்கொள்கிறார்.

தன்னுடைய அறிவிப்பின் மூலம், சட்டத்தின் பாலின பாகுபாட்டை தடுக்கும் எண்ணத்தை அமைச்சர் அவமதிக்கிறார். ஆண் குழந்தையை பெற்றெடுக்க பரவலாக இருக்கும் விருப்பம் தன்னுடைய உடல்நலத்திற்கு ஆபத்து இருப்பினும் கர்ப்பக் காலத்தை பூர்த்திச் செய்யும் நெருக்கம் பெண்களுக்கு இருக்கும் என்ற கருத்தை சாதகமாக கவனிக்கத் தவறியுள்ளார் மேனகா. மறுபுறம், கருவிலே பாலினம் அறியும் செயலுக்கு எதிரான சட்டத்தை ரத்து செய்தல் தொடர் கருக்கலைப்பை பரிந்துரைப்பதாக இருக்கும். இது அவருடைய இனப்பெருக்க சுகாதாரத்தில் பாதகமான விளைவுகளையும் கொண்டுவரும். சட்டத்திற்கு புறம்பான கருக்கலைப்பின் எண்ணிக்கை அதிகரிப்பதனால் பெண்களுடைய உயிருக்கே ஆபத்தாக அமையும்.

> **“கருவிலே பாலினம் அறியும் செயலுக்கு எதிரான சட்டம் நேர்மையற்ற மருத்துவத் தொழிலாளர்கள் மற்றும் பெருநிறுவன இலாபக்காரர்கள் தொழில்நுட்பத்தை தவறாக பயன்படுத்தி பாலினத் தேர்வை ஒரு இலாபகரமான வணிக செயலாக மாற்றியிருக்கும் முறையை எதிர்க்கொள்வதற்கு குறிப்பாக இயற்றப்பட்டது.”**

அரசு எதிர்க்கொள்ள வேண்டிய மற்ற சிக்கல்கள் இருப்பினும், கர்ப்பத்தை பிறப்பு வரையில் கண்காணிப்பதற்கு மாபெரும் அளவில் ஒரு கண்காணிப்பு தேவைப்படும் சராசரியாக ஆண்டிற்கு 2.5 கோடி கர்ப்பிணி பெண்களை கண்காணிப்பது இதற்கான சாதனங்கள் அதனிடம் இல்லை. “சில ஆயிரம் கதிரியக்கர்கள் மற்றும் மருத்துவர்களை கண்காணிப்பதில் அரசு தோல்வி அடைந்துள்ளது. எவ்வாறு அது லட்சக்கணக்கான கர்ப்பிணி பெண்களை கண்காணிக்க திட்டமிட்டுள்ளது?” என்று கேட்கிறார் குரானா. தற்செயலாக அல்லது வேண்டுமென்றே உண்டாக்கப்படும் கருச்சிதைவுகளை கண்காணிப்பது இன்னொரு மிகப்பெரிய பணி. தற்போதைய சட்டத்தை செயல்படுத்துவது தான் பிரச்சனையின் மூலம் என்று பெண்ணிய அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. 2005–யில் வெளிவந்த ஒரு யுனிசெப் அறிக்கையின் படி 7000 பெண் சிசுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கருக்கலைக்கப்பட்டன அதேசமயம் ஒரு சதவீத மருத்துவர்கள் தான் வழக்குகளை எதிர்கொண்டனர். பெண்களுக்கு தங்களுடைய சொந்த உடல் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் உள்ள உரிமை அரசின் தலையீட்டை நியாயப்படுத்தாது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். பெண் சிசுக்கொலையினால் பாலினத்தை தீர்மானிப்பது அனுமதிக்கத்தக்கதாகாது மற்றும் கர்ப்பத்தை கண்காணிப்பதாக இருந்தால் அரசு பெண் மற்றும் குழந்தை ஆகிய இருவரின் உடல் நலத்தை கண்காணிக்கும் எண்ணத்துடன் செய்ய வேண்டும்.

**ஆதாரம்: Tehelka (29th February 2016)**

...பக்கம் 8ன் தொடர்ச்சி

சாசனத்தின் சட்ட உரை 30(1) கட்டப்பட்டிருக்கிறது என்றும் மீண்டும் மீண்டும் நிலை நிறுத்தியுள்ளது. செயின்ட் ஸ்டீபன் கல்லூரி எதிர் தில்லி பல்கலைக்கழகம் வழக்கில் (1992/SCC 558) அந்தக் கல்லூரி கிறிஸ்துவ சமூகத்தைச் சேர்ந்தவர்களால் ஏற்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது என்று உச்சநீதிமன்றம் அறிவித்தது. இதுதான் சரியான சட்டப்பூர்வ நிலைப்பாடாகும். அரசமைப்பு சாசனத்திற்கு சரியான விளக்கம் அளிப்பதில் இது தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

என். அம்மார்ட் எதிர் எம்ஜே உயர்நிலைப்பள்ளி மேலாளர் வழக்கில் (1998/6SCC 674) ஒரு சிறுபான்மையினர் கல்வி நிறுவனத்தை அரசாங்கம் அவ்வாறு அறிவித்தாலும் அறிவிக்காவிட்டாலும் அது தொடர்ந்து ஒரு சிறுபான்மையினர் கல்வி நிறுவனமாகவே இருக்கிறது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. பின்வரும் உறுதிப்பாடுகளின் அடிப்படையில் அந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டது: (1) ஒரு கல்வி நிறுவனத்தை சிறுபான்மையினர் நிறுவனம் என்று அரசாங்கம் அறிவிக்கிறபோது, அந்த நிறுவனம் ஒரு சிறுபான்மையினர் சமூகத்தால் ஏற்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது என்ற உண்மை நிலையைத்தான் அந்த அறிவிப்பு அங்கீகரிக்கிறது; (2) அந்தக் கல்வி நிறுவனத்தில் சிறுபான்மையினர் தகுதி நிலையை பொது வெளியில், சட்டப்பூர்வமாக ஏற்கப்படுகிறது; (3) அத்தகைய அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்பாகவே அந்தக் கல்வி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்ற முடிவின் அடிப்படையில் அது அமைகிறது.

நிறைவாக, அரசமைப்பு சாசனத்தின் உணர்வுக்கு ஆதரவாக மத்திய அரசு செயல்பட வேண்டும். அரசமைப்பு சாசனத்தை உருவாக்கியவர்களின் தொலைநோக்கையும் மதிநுட்பத்தையும் அரசு உயர்த்திப் பிடிக்க வேண்டும். இந்திய தேசம் கட்டப்பட்டுள்ள முற்போக்கான மாண்புகளைப் பாதுகாப்பதன் மூலமாகவே இதைச் செய்ய முடியும். இதுவரை கட்டிக் காக்கப்பட்டு வந்துள்ள மதச் சார்பற்ற, ஜனநாயக விழுமியங்களை சீர்குலைக்கக்கூடிய குறுகிய, பிளவுவாத உணர்வுகளின் பிடியில் அரசு சிக்கிக்கொள்ளக் கூடாது. அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் என்ற நிலையில் இருந்து குடிமக்கள் என்ற நிலைக்கு நாம் மாறியது திடீரென நடந்திருக்கலாம். ஆனால், ஒரு பொதுநோக்கிலிருந்து அந்த மாற்றம் நிகழ்ந்தது. “இந்தியக் குடிமக்களாகிய நாம்” என்ற பொதுநோக்கு வளர்த்தெடுக்கப்பட்டது. நமது வேறுபாடுகள் நமது வலிமைக்கான அடிப்படையாக்கப்பட்டன. ஆகவேதான், “வேற்றுமையில் ஒற்றுமை” என்பது ஒரு ஈர்ப்பு மொழியானது. அரசமைப்பு சாசன நிர்ணய சபையின் விவாதங்களில் அதுவே மிகச் சிறந்த, மையப் பொருளாக அமைந்தது. நம்மை ஒன்றுபடுத்திய பொது எதிரி வெளியேறிவிட்ட நிலையில், இன்னொரு பெரிய எதிரி குறித்த எச்சரிக்கை நமக்குத் தேவை. ஐரோப்பாவை இனவாத, மொழிவாத அடிப்படையில் சிதறடித்த உணர்வுகள் இன்று இந்தியாவை வேறுவகையில் அச்சுறுத்துகின்றன. சமூக உரிமைகள் தனிமனித உரிமைகளுக்கு எதிரானவையோ, பொருந்தாதவையோ அல்ல. சுதந்திரம், சமூகத்தன்மை இரண்டோடும் கலந்து இந்த உரிமைகளை உறுதிப்படுத்த முடிந்திருக்கிறது என்பதே இந்தியாவின் தனித்தன்மையாகும். நமது பண்பாட்டுத் பன்முகத்தன்மை அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறபோது அரசமைப்பு சாசன வாதமே ஒரே தீர்வாக அமைகிறது. பிரிட்டிஷ் ஆட்சியின்போது தேசியவாதிகள் மகிழ்ச்சியோடு சிறுபான்மையினரை அரவணைத்துக்கொண்டு பாதுகாப்பளித்தார்கள். ஆனால் இன்று, அந்த மதச்சார்பின்மை ஆழமான, இருண்ட வகுப்புவாதத்தின் வன்மப் பிடியில் சிக்கியிருக்கிறது. நேரு காலத்தில் அவரது சோஷலிச, மதச்சார்பற்ற கொள்கைகள் வகுப்புவாத முழக்கங்களைத் தடுத்து நிறுத்தின. ஆனால் இன்று, ஒரு இந்து தேசியவாதம் முனைப்புப் பெற்றுள்ளது. அதில், நாட்டின் பொது எதிரியாக சிறுபான்மையினர் சித்தரிக்கப்படுகிறார்கள். இத்தகைய வெறுப்பு மனநிலை, மேலும் மேலும் வெறுப்பைத்தான் வளர்க்கும். நேரு எழுதியதை இங்கு மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும்:

> “சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்கான தேசிய இனங்களின் லீக் (அமைப்பு) போன்ற வழக்கமான அமைப்புகள் குறித்து எந்த பிரச்சனையும் இல்லை. அவையனைத்தும் ஏற்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு வளர்த்தெடுக்கப்பட வேண்டியுள்ளது. மதம், பண்பாடு, மொழி, தனிமனிதர்கள் மற்றும் பிரிவினரின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் ஒரு ஜனநாயக அரசமைப்பு சாசனத்தில், அனைவருக்கும் சமத்துவத்தை வழங்குவதன் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும், உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஐரோப்பாவில் நிலவிய கசப்பான மத மோதல்களோடும், கொடுந் தண்டனைகளோடும் ஒப்பிடக்கூடியதாக இந்திய வரலாற்றில் எதுவும் இல்லை. ஆகவே, மதம் மற்றும் பண்பாட்டு சகிப்புத்தன்மை குறித்த கருத்துகளுக்காக நான் வெளிநாடு செல்ல வேண்டியதில்லை. இந்திய வாழ்க்கையிலேயே அவை உள்ளடங்கியுள்ளன.”

சிறுபான்மையினர் அவர்களுக்குரியவற்றைப் பெறத் தகுதியுள்ளவர்கள். இந்தியா போன்றதொரு மதச்சார்பற்ற ஜனநாயக நாட்டின் வெற்றியை மதிப்பிடுவதற்கான அளவுகோலாக அவர்களது பண்பாட்டு உரிமைகளுக்கும், கல்வி உரிமைகளுக்குமான பாதுகாப்பு இருக்க வேண்டும். இதுபோன்ற ஒரு காலகட்டத்தில் ஒற்றுமைகள் கொண்டாடப்பட வேண்டும், சிறுபான்மையினர் கௌரவத்தோடும், சுதந்திரத்தோடும் வாழ்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படுவது என்பது சட்டப்பூர்வ ஏற்பாடு மட்டுமல்ல. மாறாக, அது அனுபவம் சார்ந்ததும், நிகழ்வு சார்ந்ததும் ஆகும். ஆகவே, மேலும் மேலும் பொது ஒப்புதலோடு, சமூகங்களுக்கிடையேயான, மக்களுக்கிடையேயான உரையாடல்களோடு அது உருவெடுக்க வேண்டும். இவ்வாறு ஒத்திசைந்து வாழ்வதென்பது சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்டதாக பெரும்பான்மையினர் – சிறுபான்மையினர் என்ற சிக்கல்களை ஒதுக்கித் தள்ளுகிற தத்துவார்த்த மனப்போக்காக, ஒருவரையொருவர் மதித்தல், நம்புதல் என்ற உணர்விலிருந்து பரவியதாக அமைய வேண்டும்.

**ஆதாரம்: எகனாமிக் & பொலிடிகல் வீக்லி, ஜூலை 16, 2016**

# கொடுமை !

## பெண்களுக்கு சிறுவயதில் திருமணம்...

*ஆய்வில் அதிர்ச்சி தகவல் அம்பலம்*

புதுடில்லி: இந்தியாவில், 30 சதவீத பெண்கள், 18 வயது நிறைவதற்கு முன் திருமணம் செய்து கொள்வதாக, அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது. இவர்களில் பலர், 10 வயது கூட நிறைவடையாதோர் என, சமீபத்திய ஆய்வு தெரிவிக்கிறது. நம் நாட்டில், பெண்ணின் திருமண வயது, 18 ஆகவும், ஆணின் திருமண வயது, 21 ஆகவும் உள்ளது. இந்த வயதுக்கு முன் திருமணம் செய்வது, குழந்தை திருமண தடை சட்டத்தின் கீழ், குற்றமாக கருதப்படும்.

இந்நிலையில், 'நாட்டில், தற்போது திருமணமாகும் பெண்களில், 30 சதவீதத்துக்கு மேல், 18 வயது நிரம்பாதோர்' என, மத்திய உள்துறை அமைச்சகத்தின் மக்கள் தொகை கணக்கீடு அலுவலகம் தகவல் வெளியிட்டுள்ளது. இதுபற்றிய விவரம் வருமாறு: இந்தியாவில், 'ஹிந்து, முஸ்லிம் ஆகிய மதங்களை சேர்ந்த பெண்களில், 30 சதவீதம் பேர், சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட, 18 வயதுக்கு முன்பே திருமணம் செய்து கொள்கின்றனர். பெரும்பாலும், அவர்களின் பெற்றோர்களின் வற்புறுத்தலால் இதுபோன்ற திருமணங்கள் நடக்கின்றன. இதனால், கர்ப்பகால பிரச்சனை, குடும்ப வன்முறை போன்ற காரணங்களால், இப்பெண்களில் பலர் உயிரிழக்க நேரிடுகிறது.

'ஹிந்துக்களில், 31.3 சதவீத பெண்களும், முஸ்லிம்களில், 30.6 சதவீத பெண்களும், 17 அல்லது அதற்கு குறைந்த வயதில் திருமணம் செய்கின்றனர். குறைந்த வயதில் திருமணம் செய்யும் 'ஹிந்து பெண்களில், 6 சதவீதம் பேருக்கு, 10 வயது கூட ஆகவில்லை; முஸ்லிம்களில், 5 சதவீதம் பெண்கள், 10 வயதுக்கு முன் திருமணம் செய்கின்றனர். சீக்கியம், கிறிஸ்தவம், பவுத்தம், ஆகிய மத பிரிவுகளில், இளம் வயது திருமணங்கள் குறைவாகவே நடக்கின்றன. கடந்த, 2001ல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, 18 வயதுக்கு முன் திருமணம் செய்த பெண்கள், 43 சதவீதம் பேர். இது, 2011ல், 30 சதவீதமாக குறைந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், 1.5 கோடி குழந்தை திருமணங்கள் நடந்துள்ளன.

**1929ல் சட்டம்:** பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், 1929ல், இந்தியாவில், குழந்தைத் திருமணங்களுக்கு முதன்முதலில் தடை விதிக்கப்பட்டது. குழந்தைத் திருமண தடை சட்டப்படி, பெண்களின் திருமண வயது, 14 ஆகவும், ஆண்களின் திருமண வயது, 18 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. 2006ல், திருமண வயது,பெண்களுக்கு, 18 ஆகவும், ஆண்களுக்கு, 21 ஆகவும் உயர்த்தப்பட்டது.

**தடைபடும் கல்வி:** குழந்தைத் திருமணங்களால், பெண் குழந்தைகளின் கல்வி தடைபடுகிறது. சிறுவயதில் திருமணமாகும் பெண்கள், போதிய படிப்பறிவு இல்லாததால், கணவர் மற்றும் குடும்பத்தாரின் கொடுமைகளுக்கு எளிதில் ஆளாக நேரிடுகிறது. சுயமாக சம்பாதிக்கும் திறனின்றி, வாழ்நாள் முழுவதும், பிறரை நாடும் சூழ்நிலைக்கு, பெண்கள் தள்ளப்படுகின்றனர்.

**மரண தண்டனை:** 'யுனிசெப்' எனப்படும், ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் அவசரகால நிதியம், 'குழந்தைத் திருமணங்கள், சிறுமிகளுக்கு விதிக்கப்படும் மரண தண்டனை' எனக் கூறியுள்ளது. தமக்கு பிறக்கும் குழந்தைகளை, உடல்ரீதியில் தாங்கும் சக்தி கிடைக்கும் முன்பே, சிறுமிகளுக்கு திருமணம் செய்வதால், அச்சிறுமிகள் உயிரிழக்கும் அபாயம் அதிகமாக உள்ளதென, யுனிசெப் எச்சரித்துள்ளது. பல தலைமுறைகள் கடந்த பின்னும், குழந்தைத் திருமண வழக்கத்தை, சட்டத்தால் தடுக்க முடியாமல் போவது, அதிர்ச்சிகரமாக உள்ளது. நாடு முழுவதும், இந்த வழக்கம் பரவலாக காணப்படுகிறது.

**– ரஞ்சனா குமாரி**

சமூக ஆராய்ச்சி மைய இயக்குனர், டில்லி

# திருப்பூர் நகர கதிரவன் மெட்ரிக்குலேசன் பள்ளியில் 6 வயதுள்ள ஆண் குழந்தை பள்ளியில் பாதுகாப்பு இல்லா சூழலால் அதே பள்ளியில் படித்துவந்த 11 வயதுள்ள ஆண் குழந்தையால் இறந்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட

# உண்மையறியும் குழு அறிக்கை

## முக்கியமான பிரச்சினைகளும் - பரிந்துரைகளும்

சனவரி-27, 2016 அன்று திருப்பூர் தனியார் பள்ளியில் 1-ம் வகுப்பில் படித்துவந்த சிறுவன் ஸ்ரீசிவராம் இறந்த சம்பவம், கடந்த 10 ஆண்டுகளாக தமிழகப் பள்ளிகளில் பாதுகாப்பு இல்லா சூழல் அதிகரித்து வருகிறது என்பதையே சுட்டிக்காட்டுகிறது. தமிழகப் பள்ளிகளில் அதாவது அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் படித்துவரும் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் அனைத்துவித தீங்குகளுக்கும் ஆளாகும் (உடல், மன, பாலியல், புறக்கணிப்பு உள்ளிட்ட) ஆபத்தான சூழலில்தான் உள்ளார்கள். 2009-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 6 முதல் - 14 வயதுவரை உள்ள குழந்தைகளின் கல்வி அடிப்படை உரிமை என்று அங்கீகரித்துள்ளது. மேலும் அது இவ்வயது குழந்தைகள் பள்ளிக்கு செல்வதையும் அவர்களின் பெற்றோர் பள்ளிக்கு அனுப்பவேண்டியதையும் கட்டாயமாக்கியுள்ள நிலையில் தரமான கல்வியும் பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பும் இன்றுவரை உறுதிசெய்யப்படவில்லை.

உண்மையறியும் குழு வேண்டுவதெல்லாம் தமிழக அரசு உடனடியாக ஒரு குழுவை அமைத்து தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளின் பாதுகாப்பு தரங்கள் குறித்த சமூக ஆய்வொன்றை மேற்கொள்வது அவசியத்தேவை என வலியுறுத்துவதுடன் அனைத்துப் பள்ளிகளிலும் குழந்தைகளைப் பாதுகாக்க "குழந்தை பாதுகாப்பு கொள்கை" ஒன்றை உருவாக்கி செயல்படுத்துவது அவசியம் என்பதை கட்டாயமாக்க ஒரு அரசாணை பிறப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த குழந்தைப் பாதுகாப்பு கொள்கையில் ஆசிரியரின் நன்னடத்தைகள், குழந்தைகளை கையாளும் முறை, குழந்தைகளே குழந்தைகளைப் புரிந்துகொள்ளும் வழிமுறைகள் போன்றவற்றை மையமாககொண்டு அது அமைந்திருக்க வேண்டும். குழந்தைகள் தங்கள் பாதுகாப்பை உறுதிசெய்ய புகார்தரும் முறை, குறை தீர்முறை அடங்கிய அமைப்புகளையும் அது கொண்டிருக்க வேண்டும்.

ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள பள்ளித் தாளாளர்கள், முதல்வர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், நிர்வாக ஊழியர்கள், சேவைப்பணியில் உள்ள காவலர்கள், ஓட்டுனர்கள், தோட்டக்காரர்கள், சமையல் உதவியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் "குழந்தை பாதுகாப்பு கொள்கை" குறித்து முழுமையாகப் புரிந்துகொள்ளும் வகையில் திறன் அறிவு பயிற்சிகள் அளித்து ஒவ்வொரு குழந்தையின் மாண்பையும், மரியாதையையும் காப்பாற்றும் வகையில் அனைத்துக் குழந்தைகளும் அனைத்து வகையான தீங்கிழைத்தல்களிலிருந்து பாதுகாக்கும் வண்ணம் மேற்கூறியவர்கள் அனைவரையும் குழந்தை பாதுகாப்புக் கொள்கையை ஏற்கச் செய்து அதை அன்றாடம் கடைப்பிடித்திடும் வகையில் நடைமுறைப்படுத்திட வேண்டும்.

### அறிமுகம்:

கடந்த சனவரி மாதம் 28-ம் தேதி பலதரப்பட்ட பத்திரிக்கைகளிலும் வந்த செய்தி திருப்பூர் தனியார் பள்ளியில் 1-ஆம் வகுப்பு படிக்கும் ஸ்ரீ சிவராம் என்ற 6 வயது பள்ளிச் சிறுவன், அதே பள்ளியில் படிக்கும் 11 வயது சிறுவனால் தாக்கப்பட்டு இறந்ததாக செய்தி வந்தது. இந்த செய்தியை அறிந்து தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு கூட்டமைப்பு சார்பாக குழந்தை உரிமை மற்றும் முன்னேற்ற மையம் **(CCRD)** -சென்னை, சமூக கல்வி மற்றும் முன்னேற்ற மையம் (**CSED**)- அவினாசி, மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (**HRF**)- சென்னை மற்றும் சக்தி விடியல் - மதுரை ஆகிய நிறுவனங்கள் இணைந்து தமிழக அளவில் உண்மையறியும் குழுவை அமைத்து, அக்குழு கண்டறிந்த உண்மைகளின் அடிப்படையில் அரசுக்கு சில பரிந்துரைகளை வைத்துள்ளது. இந்த பரிந்துரைகள் இனிவரும் காலங்களில் இதுபோன்ற துயர சம்பவங்கள் பள்ளிகளில் நடைபெறாவண்ணம் தடுத்திடவும்,

குழந்தைகள் தங்கள் இளம்பருவ பள்ளி கல்வியை ஆரோக்கிய சூழலில் ஆனந்தமுடன் கற்கவும் உதவிடும் என நம்புகிறோம்.

**உண்மையறியும் குழு உறுப்பினர்கள்:**

திரு.சுப.தென்பாண்டியன் -வழக்கறிஞர், ஆலோசகர் *CCRD* - சென்னை

திரு.C. நம்பி, நிர்வாக இயக்குனர் - *CSED,* அவினாசி

திருமிகு.L.T.ஸ்டெகினா ஜென்சி, இணை இயக்குனர் - *CCRD,* சென்னை

திரு.D.ஆரோக்கியம், திட்ட இயக்குனர் - சக்தி விடியல், மதுரை

திருமிகு.P.தமிழரசி, ஒருங்கிணைப்பாளர் -*HRF,* சென்னை

**நோக்கம் :**

- பள்ளியின் குழந்தை பாதுகாப்பு சூழல் மற்றும் தரங்களை தெரிந்துகொள்ள..
- இச்சம்பவத்தில் அரசு துறை அதிகாரிகளின் செயல்பாடு மற்றும் இந்த சம்பவம் தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி அறிந்து கொள்ள..
- பள்ளிகளில் குழந்தைகளுக்கு ஏற்படும் இத்தகைய ஆபத்துகளை தவிர்க்க அரசின் கவனத்திற்கு கொண்டுசெல்லும் பரிந்துரைகள் அளிக்க..

**1. துயரமான இச்சம்பவத்தின் சம்பவக்கோர்வை :**

- ஸ்ரீ சிவராம் என்ற 6 வயது சிறுவன் திருப்பூரில் உள்ள கதிரவன் மெட்ரிக்குலேசன் பள்ளியில் 1-ம் வகுப்பு C-பிரிவில் படித்து வந்தான். அவரது தந்தை திருப்பூரில் மெர்கண்டைல் வங்கியில் துணைமேலாளராக வேலைபார்த்து வருகிறார். இந்த குடும்பம் சில வருடங்களுக்கு முன் அதே பெயரிலுள்ள வங்கியில் மும்பை கிளையில் பணி செய்து தற்போது கடந்த 3 வருடங்களாகத் தான் இங்கு (திருப்பூர் கிளை) மாற்றலாகி வந்துள்ளது. இவருக்கு (ஸ்ரீ சிவராம்) 1-சகோதரன், 1-சகோதரி உள்ளனர் (இரட்டையர்கள்). ஸ்ரீ சிவராமன் இறப்புக்கு காரணமானவராக கூறப்படும் சிறுவன் விஜய் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) அதே பள்ளியில் 6-ம் வகுப்பில் படித்துவருகிறார். இவர்கள் இருவரும் தங்கள் வீட்டிலிருந்து ஒரே பள்ளி வாகனத்தில் பயணம் செய்துதான் பள்ளிக்கு சென்று வந்தனர்.

**1.2. குழுவினர் சந்தித்தவர்கள்**

| வ.எ் | பெயர் | உறவுமுறை |
|---|---|---|
| 1 | திரு.அருண் பிரசாத் | இறந்த குழந்தையின் தந்தை |
| 2 | திரு.அ.சுவாமிநாதன் | ஓய்வு பெற்ற தலைமையாசிரியர், பஞ்சாயத்து யூனியன் பள்ளி, அம்மாபாளையம் |
| 3 | திரு.ஜான்சன் | அருண்பிரசாத்துடன் பணிபுரிபவர் |
| 4 | திருமிகு.மீனாட்சி | முதல்வர்- கதிரவன் மெட்ரிக்குலேசன்பள்ளி,திருப்பூர் |
| 5 | திருமிகு.இந்திராணி | செயலாளர், கதிரவன் மெட்ரிக்குலேசன் பள்ளி, திருப்பூர் |
| 6 | திரு.ராஜலிங்கம் | உடற்பயிற்சி ஆசிரியர் - கதிரவன் மெட்ரிக்குலேசன்பள்ளி,திருப்பூர் |
| 7 | திரு.J.ஹபீப் | உதவி ஆய்வாளர் ,திருப்பூர் மத்திய காவல்நிலையம் |
| 8 | திருமிகு.I. சங்கீதா | பெண் காவலர் - திருப்பூர் மத்திய காவல்நிலையம் |
| 9 | Dr.நாகராஜன் | உளவியல் நிபுணர் - வழிகாட்டி மன நல ஆராய்ச்சி நிறுவனம், திருப்பூர் |
| 10 | திரு.சிவராஜ் மோகன் | மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு, DCPU - திருப்பூர், |
| 11 | திரு. செல்லதுரை | தலைவர் - இளம்சிறார் நீதிக்குழுமம், திருப்பூர் |

- அனைத்து குழந்தைகளும் பள்ளிக்கு காலை 7.45 மணியளவில் வந்து சேர்கின்றனர். அப்போது ஆசிரியர்களின் எந்த கண்காணிப்பும் பள்ளியில் இருப்பதில்லை.

- 8 மணியிலிருந்து 8.45 மணிவரை வகுப்புக்கு வரும் குழந்தைகள் பெரும்பாலான நேரம் பள்ளிவகுப்பறைக்கு வெளியே விளையாடுவது வழக்கம். அதுபோல் பல நேரங்களில் ஸ்ரீ சிவராம் இறப்புக்கு காரணமாக சொல்லப்படும் சிறுவனும், இறந்துபோன ஸ்ரீ சிவராம் என்ற சிறுவனும் வகுப்புக்கு வெளியே ஒன்றாக விளையாடிய நாட்களும் உண்டு.

- சம்பவம் நடந்த 27 சனவரி 2016 அன்று அவர்கள் வீட்டிலிருந்து வந்த பள்ளி வாகனத்தில் இருவரும் விளையாடிக்கொண்டே வந்துள்ளனர். அப்போது அவர்களுக்குள் சிறு சண்டை வந்துள்ளது. அப்போது இறந்துபோன சிறுவன் (ஸ்ரீ சிவராம்) இறப்புக்கு காரணமாக சொல்லப்படும் சிறுவனை "பாகல்" என்ற வார்த்தையை கூறி திட்டியதாகவும் (இதன்பொருள் இந்தி மொழியில் - பைத்தியம்) அதனால் பள்ளிக்கு வந்தவுடன் ஸ்ரீ சிவராமை தாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பள்ளிக்கு வந்ததாகவும் தெரிகிறது.

- அவர்கள் பள்ளிக்கு வந்தடைந்தபோது, பள்ளியில் விளையாட்டு ஆசிரியர் அப்போது இருந்ததால் ஸ்ரீ சிவராமனைத் தாக்க முடியாமல் போனதாகவும், பின்பு காத்திருந்து சிவராமன் கழிவறைக்கு செல்வதைப் பார்த்தபின் அவனைப்பின்தொடர்ந்து விஜய் சென்றதாகவும் கூறப்படுகிறது.

- கழிவறை பள்ளி வகுப்பறை கட்டிடங்களில் இருந்து வெகுதூரத்தில் உள்ளது. அதன் அருகில் கூழாங்கற்களும், மிகப்பெரிய கற்களும் குவித்து வைக்கப்பட்டு இருந்ததாகவும் இதுதான் குழந்தைகளுக்கு மிகவும் ஆபத்தை விளைவிக்ககூடியதாக இருந்திருக்கிறது என தெரிகிறது.

- பள்ளிக்குவரும் இளங்குழந்தைகளுக்கு உதவிசெய்ய ஆசிரியர்கள்/பணியாளர்கள் யாரும் அங்கு இல்லாத சூழலில் ஸ்ரீ சிவராமனை 6ம் வகுப்பு படித்துவந்த சிறுவன் விஜய் தாக்கியுள்ளதாகத் தெரிகிறது. ஸ்ரீ சிவராமன் தலையைப்பிடித்து கழிவறைச் சுவற்றில் மோதி அவரது கன்னத்தில் கல்லால் தாக்கியுள்ளதாகவும் தெரிகிறது.

- அப்போது ஸ்ரீ சிவராமின் நெற்றியிலிருந்தும், தலையிலிருந்து இரத்தம் அதிகமாக வெளியேறியதைக் கண்ட மாணவர் விஜய் (இச்செயலை செய்ததாகக் கூறப்படும் சிறுவன்) பயத்தில் இரத்தத்தை நிறுத்துவதற்கு (தனது கைக்குட்டையாலும்/கையாலும் அருகிலிருந்த பேப்பரை எடுத்து அழுத்தியும்) முயற்சி செய்ததாகவும் தெரியவருகிறது.

- ஸ்ரீ சிவராமனை ஒரு சிறுவன் இழுத்துக் கொண்டு கழிவறைக்குள் செல்வதை மாடி வகுப்பறையில் ஒரு மாணவி பார்த்து அதை இன்னொரு மாணவரிடம் சொல்லி அவர்மூலம் விளையாட்டு ஆசிரியருக்கு தகவல்கொடுத்து அவர் கழிவறைக்கு அருகில் வந்துபார்த்தபோது அடிப்பட்டு சுயநினைவை இழந்திருந்த சிறுவன் ஸ்ரீ சிவராமைக் கண்டு அருகிலுள்ள கிருத்திகா தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

- அப்போது ஸ்ரீ சிவராமனுக்கு அருகில் விஜய் அங்கே நின்றுகொண்டிருந்ததாகவும், அவரது சீருடையில் இரத்தக் கறைகள் படிந்திருந்ததாகவும் விளையாட்டு ஆசிரியர் கூறுவதிலிருந்து தெரிகிறது.

- கிருத்திகா மருத்துவமனை மருத்துவர்கள் மிகவும் ஆபத்தான நிலையில் சிறுவன் இருப்பதால் திருப்பூர் அரசு பொது மருத்துவமணைக்கு கொண்டு செல்ல பரிந்துரைத்ததின் அடிப்படையில் ஸ்ரீ சிவராம் அரசு பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டான்.

- அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கு மருத்துவப் பரிசோதனையில் ஸ்ரீ சிவராம் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

- பள்ளி நிர்வாகம் காலை 10.30 மணிக்கு அருகில் உள்ள திருப்பூர் மத்திய காவல்நிலையத்தில் சிறுவன் இறந்தது குறித்த தகவல் (புகார்) அளித்துள்ளது.

- சந்தேகத்திற்கிடமான சிறுவன் விஜயும் கிருத்திகா மருத்துவமனைக்கு

அழைத்துச்செல்லப்பட்டு, முதலுதவி செய்து பின்னர் பள்ளிக்கு அழைத்துவரப்பட்டுள்ளார்.

- பள்ளிப்புகாரின் அடிப்படையில் காவல்துறை முதல்கட்ட விசாரணை நடத்தி சந்தேகப்படும் அந்த குழந்தையை காவல் நிலையம் அழைத்துவந்து விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கையை பதிவுசெய்து (IPC 302) அன்று இரவு இளஞ்சிறார் நீதிக்குழும தலைவர் முன் சார்பு செய்து கோவையிலுள்ள கூர்நோக்கு இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்.

- இறந்துபோன குழந்தையின் சடலக் கூராய்வு 27.01.2016 மாலை 3.30மணிக்கு செய்து முடிக்கப்பட்டு உடல் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவரது சொந்த ஊரான மதுரையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## குழவினர் விசாரித்தறிந்த தகவல்கள

<u>திரு. அருண்பிரசாத் - இறந்துபோன ஸ்ரீ சிவராமின் தந்தை:</u>

நான் வங்கிக்கு புறப்பட்டுக்கொண்டிருந்தபோது பள்ளியிலிருந்து காலை சுமார் 8.45 மணியளவில் தொலைபேசியில் அழைத்து உங்கள் மகனுக்கு உடம்பு சரியில்லை பள்ளிக்கு வாருங்கள் என்றனர். நானும் எனது நண்பரும் பள்ளிக்குப் புறப்பட்டுசெல்லும் போது மீண்டும் தொலைபேசியில் பள்ளியிலிருந்து அழைத்து கிருத்திகா மருத்துவமனைக்கு வரச்சொன்னார்கள். கிருத்திகா மருத்துவமணைக்கு செல்லும்போதே மீண்டும் தொலைபேசியில் அழைத்து நேராக அரசு பொது மருத்துவமனைக்கு வரச்சொன்னார்கள். அரசு மருத்துவமனையை சென்றடைந்தபோது, மருத்துவர்கள் எனது குழந்தை இறந்துவிட்டதாகச் சொன்னார்கள்.

இந்தப் பள்ளியில் எனது பையன் 1 வருடமாக படித்துவருகிறான். அந்தப் பள்ளியில் ஒழுக்கம் என்ற பெயரில் குழந்தைகளை வெளியில் வெயிலில் நிற்க வைப்பார்கள், பெற்றோரை அழைத்து வரச் சொல்வார்கள் நாங்களும் அங்கு போனால் வெளியில் வெயிலில்தான் நிற்கவேண்டும்.

இப்பள்ளியில் குழந்தைகளை கவனிப்பதில் மெத்தனப்போக்கு உள்ளது. காலையில் 7.45 மணியிலிருந்தே குழந்தைகள் பள்ளிக்கு வர ஆரம்பித்துவிடுவார்கள் ஆனால் ஆசிரியர்கள் 8.45 மணிக்குதான் வருவார்கள். இந்த இடைப்பட்ட நேரத்தில் குழந்தைகளை கவனித்துக்கொள்ள ஆட்களே இருப்பதில்லை. சுமார் 1200 குழந்தைகள் படிக்கும் இப்பள்ளியில் ஒரே ஒரு விளையாட்டு ஆசிரியர்தான் உள்ளார், அவர் எப்படி எல்லாக் குழந்தைகளையும் பார்த்துக்கொள்வார். அதுமட்டுமின்றி சிறிய குழந்தைகள் பயன்படுத்தும் கழிவறை அருகில் கரடுமுரடான/கூரான கூழாங்கற்களைக் குவித்து வைத்திருந்தார்கள். இந்தச் சம்பவம் நடந்த பிறகு அவை அகற்றப்பட்டிருக்கின்றன. பள்ளி விளையாட்டு மைதானத்தையும் வகுப்பறையும், கழிவறையையும் சுற்றி எந்தப் பாதுகாப்பும் இல்லை. இப்போதுதான் முள்வேலி போட்டுள்ளார்கள் என பத்திரிக்கையை பார்த்து நான் தெரிந்துகொண்டேன். முழுக்க முழுக்க இது பள்ளி நிர்வாகத்தின் கவனக் குறைவால் ஏற்பட்ட இறப்புதான். வகுப்பு ஆசிரியர்களின் கண்காணிப்பு மாணவர்கள் பள்ளிக்கு வரும்போது இருப்பதில்லை. இதில் நான் விஜயை குற்றம் சுமத்த விரும்பவில்லை, அவன்மீது எனக்கு கோபமும் இல்லை, ஏனெனில் அவனும் ஒரு குழந்தைதான்.

**திருமிகு. இந்திராணி - செயலாளர், கதிரவன் மெட்ரிக்குலேசன் பள்ளி- திருப்பூர்**

சம்பவத்தின்போது நான்தான் எனது கணவரின் காரை கொண்டு வந்து ஸ்ரீ சிவராமையும் இன்னொறு சிறுவனையும் கிருத்திகா மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றேன்- சிறு காயங்களுடன் இருந்த மாணவனை, முதலுதவிசெய்து பள்ளிக்கு அனுப்பிவிட்டு அதிகம் காயப்பட்டிருந்த மாணவனை கிருத்திகா மருத்துவமனை டாக்டர்களின் ஆலோசனைப்படி திருப்பூர் அரசு பொது மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம், அங்கு அவனை பரிசோதித்த மருத்துவர்கள் சிறுவன் (ஸ்ரீ சிவராம்) இறந்துவிட்டதாக கூறினர்.

**திருமிகு.மீனாட்சி- முதல்வர், கதிரவன் மெட்ரிக்குலேசன் பள்ளி- திருப்பூர்**

எனக்கு இந்த விசயம் தெரிந்தவுடன் அருகில் உள்ள காவல்துறைக்கு தகவல் கொடுத்தேன் இந்த சம்பவத்திற்கு பிறகு பள்ளி வளாகத்தை சுற்றி வேலி அமைத்துள்ளோம், கண்காணிப்பு கேமரா எல்லா வகுப்புகளிலும் பொருத்தியுள்ளோம். பள்ளியின்

பின்புறத்தை (குழந்தைகள் கழிவறை உள்ள பகுதி) கவனிக்க பாதுகாவலர்களை நியமித்துள்ளோம்.

**திரு.நாராயணமூர்த்தி - தாளாளர், கதிரவன் மெட்ரிக்குலேசன் பள்ளி- திருப்பூர்**

தொலைபேசியின் மூலம் உண்மையறியும் குழுவுடன் பேசிய திரு.நாராயணமூர்த்தி, "நான் சம்பவத்தை கேள்விபட்ட உடனே போலீசுக்கு தகவல்கொடுத்தேன். இறந்துபோன மாணவன் ஸ்ரீ சிவராமன் நினைவாக எங்கள் பள்ளி வளாகத்திற்குள்ளே ஒரு நினைவுத்தூண் எழுப்ப உள்ளோம். அத்துடன் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து பள்ளியின் பொது இடத்தில் எழுதிவைக்கவும் உள்ளோம்.

**திருமிகு.சங்கீதா- போலீஸ் கான்ஸ்டபிள், திருப்பூர் மத்திய காவல்நிலையம்**

இந்தச் சம்பவத்தின் மீது புகார் வந்தவுடன் சப்-இன்ஸ்பெக்டருடன் நானும் சம்பவ இடத்தைச்சென்று பார்த்தேன். அப்போது சந்தேகத்திற்கிடமாக ஒரு சிறுவனை (விஜய்) பள்ளி நிர்வாகம் குற்றம் சாட்டியது. அவனை உற்று நோக்கியதில் அவனது உடையில் ஈரம் இருந்தது. பின்பக்க உடையில் இரத்தக்கரை இருந்தது. அதனால் அவனிடம் விசாரித்தோம் அவன் இறந்த சிறுவனுடன் தகராறில் ஈடுபட்டதை ஒத்துக்கொண்டான். அவனை இளம்சிறார் நீதிக்குழுமம் தலைவர் வீட்டில் முன்னிருத்தி அவரது அனுமதியுடன் கோவை கூர்நோக்கு இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டான்.

**திரு.J.ஹபீப்- உதவி ஆய்வாளர், திருப்பூர் மத்திய காவல் நிலையம்**

நான் பணியில் அன்று இல்லை. பணியில் இருந்தவர் மாறுதலாகிச் சென்றுவிட்டார். நான் நாமக்கல் மாவட்டத்தில் பணியில் இருந்தபோது ஒரு பையன் அவனது அப்பாவின் இரண்டாவது மனைவியை கொன்றுவிட்ட வழக்கு வந்தது. நான்தான் FIR போட்டு JJB-யில்சார்பு செய்தேன். 1 வருட விசாரணையில் சிறுவன் கொலை செய்ததற்கான நேரடி சாட்சியங்கள் இல்லை என நிரூபிக்கப்பட்டு தற்போது அவன் பள்ளியில் படித்து வருகிறான். இந்த வழக்கை பொறுத்தவரை JJB தலைவர் தான் முடிவெடுக்க வேண்டும்.

**திரு.அ.சாமிநாதன் - ஓய்வுபெற்ற தலைமையாசிரியர், அவினாசி**

இது ஒரு கோரமான சம்பவம், முன்பெல்லாம் பள்ளிகள்தான் சமூகத்தின் சுழற்சிக்கு அச்சாணியாக இருந்தன. அப்போதெல்லாம் மாணவர்கள் பள்ளிக்கு வருவதற்கு முன் ஆசிரியர்களாகிய நாங்கள் பள்ளியில் இருப்போம். பள்ளி முடிந்து மாணவர்கள் அனைவரும் புறப்பட்ட பின்புதான் ஆசிரியர்கள் பள்ளியை விட்டு புறப்படுவோம். குழந்தைகளிடம் நெருக்கமான அன்பும் ஆதரவும் காட்டுவோம். இதற்கு மாறாக இப்போது சம்பவங்கள் நடந்துவருகின்றன. எனினும் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கும்போது முழுபொறுப்பும் அரசுக்குத்தான் உள்ளது. மெட்ராஸ் கல்வி விதிகளில் கல்வி அதிகாரி ஒவ்வொரு பள்ளிக்கும் வருடத்திற்கு மூன்று முறை செல்ல வேண்டும். அத்துடன் வருடத்திற்கொருமுறை விரிவான ஆய்வுமேற்கொள்ள வேண்டும் என்று இருந்தது. இந்த முறை இப்போதுள்ள கட்டாய கல்வி உரிமைச்சட்டம் 2009-லும் இருக்கலாம். என்னுடைய கருத்து என்னவென்றால் போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்தான் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் நியமிக்கப்பட வேண்டும். அத்துடன் குழந்தைகளுடன் ஆசிரியர்களுக்கு நெருக்கமான சமூக உறவுகள் இருக்க வேண்டும். மனரீதியான சிக்கல்களுக்கு குழந்தைகளுக்கு தெளிவு கூற ஆலோசனை மையம் ஒன்று ஒவ்வொரு பள்ளியிலும் கண்டிப்பாக இருக்க வேண்டும். கோபங்கள், கெட்ட எண்ணங்கள், வன்முறைகளைத் தவிர்ப்பதற்கு குழந்தைகள் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கும் வகையில் நன்னெறிப்பாடங்கள் நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

## குழவினர் கண்டறிந்தவைகளும் முடிவுகளும்

1. இந்த சோகமான சம்பவம் குறித்து பலதரப்பட்ட நபர்களை விசாரித்ததிலிருந்து குழந்தை ஸ்ரீ சிவராம் இறந்தது 27.01.2016 அன்று காலை விஜய் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற குழந்தை தனக்குள் ஸ்ரீ சிவராம் மீது இருந்த பகைமை உணர்வை தற்செயலாக வெளிப்படுத்தியதின் விளைவாக நடைபெற்ற எதிர்பாராத சம்பவமே. இதையே திருப்பூர்நகர காவல் ஆணையர் திரு.M.N. மஞ்சுநாதாவும் கூறியிருப்பது அன்றைய நாளேடுகளின் செய்தியாக வந்திருப்பது கவனிக்கத்தக்கது.

2. குழுவினர் பலரையும் விசாரணை செய்ததில் இந்த கோர சம்பவத்தின் பின் விளைவுகளை அறிய முடியாத பருவ நிலையில் இச்சம்பவத்தில் விஜய் ஈடுபட்டுள்ளார் என தெரிகிறது.

3. பள்ளிக்கு குழந்தைகள் வந்துசேரும் நேரமான காலை 7.45 மணியிலிருந்து வகுப்புகள் தொடங்கும் நேரமான 8.45 மணிவரை எந்தவிதமான பெரியவர்களின் கண்காணிப்பும் பள்ளியில் இல்லை என்பதை விசாரித்தறிந்தோம்.

4. பள்ளியில் ஆசிரியர்கள், பணியாளர்கள் கண்காணிப்பு இல்லாததாலேயே விஜய்க்கும் ஸ்ரீ சிவராமுக்கும் ஏற்பட்ட சச்சரவானது குழந்தை சிவராமனின் பரிதாபகரமான இறப்புக்கு காரணமாக இருந்துள்ளது என கருதுகிறோம்.

5. பலமுறை விஜய்கும் - ஸ்ரீ சிவராமுக்கும் சச்சரவுகள் ஏற்பட்டு அவர்களுக்குள் சமூக உறவு சரியாக இல்லை என்ற தகவல் பள்ளி நிர்வாகத்திற்கோ, குழந்தைகளின் பெற்றோர்களின் கவனத்திற்கோ கொண்டுவரப்படவில்லை.

6. ஒன்றாம் வகுப்பு படித்துவரும் 6 வயது குழந்தைகள் பயன்படுத்திவரும் கழிவறை அருகே கூர்மையான கற்களை குவித்துவைத்திருந்தது பள்ளி நிர்வாகத்தின் கவனக்குறைவாகும். இந்த சூழல்தான் இதுபோன்ற பேராபத்திற்கு காரணமாக அமைந்துவிட்டது என்பதை பள்ளி நிர்வாகம் கவனிக்க தவறிவிட்டது. அதுமட்டுமல்லாமல் கதிரவன் மெட்ரிக்பள்ளியில் ஸ்ரீ சிவராமன் இறப்பிற்கு முன்னர் குழந்தைகளுக்கான எவ்வித பாதுகாப்பு நடவடிக்கைகளும் பள்ளியில் இல்லை எனத் தெரிகிறது.

7. திருப்பூர் நகரம் KVR நகரில் கதிரவன் மெட்ரிக்குலேசன் பள்ளி கடந்த 40 வருடங்களாக இயங்கி வருகிறது. இப்பள்ளியில் சுமார் 1169 ஆண் / பெண் குழந்தைகள் படித்து வருகின்றனர். இப்பள்ளியின் தாளாளர் நாராயணமூர்த்தி என்பவர்தான். திருப்பூரில் உள்ள 78 மெட்ரிகுலேசன் பள்ளிகளின் சங்கத்திற்கு தலைவராக உள்ளார்.

8. தலைமை ஆசிரியர், வகுப்பாசிரியரைச் சந்திக்க குழுவினர் முயன்றபோது பள்ளியின் செயலாளர் வேண்டுமென்றே குழுவினர் சந்திப்பை தடுத்தார் எனினும் சம்பவம் நடந்த இடத்தை குழுவினர்சென்று பார்த்தோம். சம்பவம் நடந்த அந்தக் கழிவறை வகுப்பறையிலிருந்து வெகுதூரத்தில் உள்ளது அதுமட்டுமின்றி அதனருகில் கூர்மையான கற்கள் குவிக்கப்பட்டிருந்தது என்பதை அப்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் வாயிலாக அறிந்தோம். இத்தகைய செயல் தமிழ்நாடு மெட்ரிக்குலேசன் பள்ளி விதிகள் அரசு ஆணை 270/2012-ஐ மீறிய செயலாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

9. ஸ்ரீ சிவராம் இறப்பிற்குபின் அப்பள்ளியில் படித்துவந்த குழந்தைகளின் பெற்றோர்கள் ஒரு பெரிய போராட்டத்தை நடத்தினர். இப்பள்ளியில் படித்துவரும் குழந்தைகளின் பாதுகாப்பு சூழலை உறுதிசெய்யவேண்டும் என்று கோரிக்கை வைத்து போராடியதால் சனவரி 27, 28 அன்று பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டது.

10. பெற்றோர்கள் வலியுறுத்தியதால் பிப்ரவரி 4 2016-ல் பள்ளியில் பெற்றோர்கள், கல்வி அதிகாரிகள், பள்ளி நிர்வாகத்தினர் கலந்துகொண்ட கூட்டம் நடைபெற்றுள்ளது. இந்த கூட்டத்திற்கு இறந்துபோன ஸ்ரீ சிவராமின் பெற்றோர் அழைக்கப்படவில்லை.

11. இந்த பள்ளியில் சுமார் 1200 குழந்தைகள் படித்துவரும் நிலையில் குழந்தைகளின் மனநிலையைக் கவனித்து, ஆற்றுப்படுத்தும் / ஆலோசனை கூறும் எந்த வித ஏற்பாடுகளும் இந்த பள்ளியில் இல்லை எனத்தெரிகிறது.

12. இப்பள்ளியில் புகார்பெட்டி இல்லை, ஆலோசனைப்பெட்டி இருக்கிறது. ஆனால் அந்தப்பெட்டியில் வரும் புகார்களை எப்படி கையாளுவது யார் நடவடிக்கை எடுப்பது என்பது போன்ற எந்த அமைப்பு முறையும் நடைமுறையில் இல்லை. (இதுவரை எந்தப் புகாரும் ஆலோசனையும் வரவே இல்லையாம்).

13. இப்பள்ளியில் முதலுதவிப்பெட்டி மருத்துவ சாதனங்கள் எதுவும் இல்லை. அத்துடன் முதலுதவி குறித்து அறிந்த பயிற்சி பெற்ற ஊழியர் எவரும் இங்கில்லை. சுமார் 1200 குழந்தைகள் படிக்கும் இப்பள்ளியில் முதலுதவிப்பெட்டி இல்லாமல் இருப்பது அவரசகாலங்களில் குழந்தைகளுக்கு உடனடி மருத்துவ உதவி கிடைக்காமல் போகும் வாய்ப்பிருக்கிறது. இது குறித்து குழுவினர் நிர்வாகத்திடம் வலியுறுத்தி வந்தோம் இப்பள்ளியில் முதலுதவி அளிக்கும் பணியில் உயிரியல் ஆசிரியர் ஒருவர்தான் ஈடுபட்டுள்ளார்.

14. இந்த இறப்பு சம்பவத்திற்கு பின்.....
   - ❖ பள்ளியில் சுற்றுவேலி அமைக்கப்பட்டுள்ளது.
   - ❖ கண்காணிப்பு கேமரா பல இடங்களில் பொறுத்தப்பட்டுள்ளது.

❖ பள்ளியின் பின்பகுதியை கவனித்துக்கொள்ள பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

❖ கழிவறை அருகில் சிதறிக்கிடந்த கூர்மையான/கரடுமுரடான கற்கள் முற்றிலுமாக அகற்றப்படாமல் குவியலாக சேர்த்துவைக்கப்பட்டுள்ளது.

15. இந்த சம்பவத்திற்கு பிறகு மாவட்ட ஆட்சியர் திருமிகு.S.ஜெயந்தி.I.A.S அவர்களின் உத்தரவின்படி கல்வி அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், வருவாய்துறையினர் ஆகியோர் அடங்கிய ஒரு குழு அரசாணை Order No 1/2016 E 40074 dt.1-2-2016-ன்படி அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு பள்ளிகளின் பாதுகாப்பை கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. ஆனால் பள்ளிகளில் ஏற்கனவே உள்ள S.M.C, மற்றும் P.T.A குழு உறுப்பினர்கள் யாரும் இதில் இணைக்கப்படவில்லை என்பது சட்டப்படியான அமைப்புகளை சார்ந்த உறுப்பினர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் எனத்தெளிவாக தெரிகிறது.

16. இந்த சம்பவத்தில் காவல்துறையின் கூற்றுப்படி பள்ளி வாகனத்தில் வந்துசெல்லும்போது விஜய்க்கும் ஸ்ரீ சிவராமுக்கும் சிறு மனத்தாங்கல் இருந்ததாகவும் சம்பவ நாளான 27.01.2016 அன்று விஜயை ஸ்ரீ சிவராமன் பாகல் (பைத்தியம்) என்று திட்டியதாகவும், அதனால் கோபமுற்ற விஜய் பெரியவர்கள் கண்காணிப்பு இல்லாததை பயன்படுத்தி கழிவறை சென்ற ஸ்ரீ சிவராமை பின்தொடர்ந்துசென்று அங்கிருந்த கூரிய கற்களை கொண்டு ஸ்ரீ சிவராமை தாக்கியதாகவும், ஸ்ரீ சிவராமனுக்கு இரத்தம் அதிகமாக வருவதைகண்டு பயந்து அருகில் இருந்த பாலிதின் பையை எடுத்து இரத்தம் வந்த இடத்தில் அழுத்தியதாகவும் இரத்தம் வழிவது நிற்காததால் இரத்த வெள்ளத்தில் இருந்த ஸ்ரீ சிவராமனை தூக்கிவர விஜய் முயன்றதாகவும் அவனால் முடியாமல் போகவே ஸ்ரீ சிவராமை கீழே போட்டதில் கீழே கிடந்த கூர்மையான கற்கள் குத்தி ஸ்ரீ சிவராமின் பின்தலையில் காயம் ஏற்பட்டதாகவும் விஜய் கூறியதாக திருப்பூர் மத்திய காவல்நிலைய பெண் காவலர் கூறுவதிலிருந்து இச்சம்பவம் பின்விளைவுகளை அறியாது சிறுவன் செய்த தவறே உயிரிழப்பில் முடிந்துள்ளது என நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

17. திருப்பூர் மத்திய காவல்நிலையத்தில் விஜய் மீது குற்ற எண் 62/2016-ல் இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 302-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

18. விஜய், திருப்பூர் இளம் சிறார் நீதிக்குழும தலைவர் முன்பு சார்பு செய்யப்பட்டு கோவை கூர்நோக்கு இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## குழுவினரின் பரிந்துரைகள்

1. தமிழக அரசு உடனடியாக ஒரு குழுவை அமைத்து தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளின் பாதுகாப்பு தரங்கள் குறித்த சமூக ஆய்வொன்றை மேற்கொள்வது இன்றைய அவசியத்தேவை என உண்மையறியும் குழு வலியுறுத்துகிறது.

2. அனைத்துப் பள்ளிகளிலும் குழந்தைகளைப் பாதுகாக்க "குழந்தை பாதுகாப்பு கொள்கை" ஒன்றை உருவாக்கி செயல்படுத்துவது அவசியம் என்பதை கட்டாயமாக்க ஒரு அரசாணை பிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். இந்த குழந்தைப் பாதுகாப்பு கொள்கையில் ஆசிரியரின் நன்னடத்தைகள், குழந்தைகளை கையாளும் முறை, குழந்தைகளே குழந்தைகளைப் புரிந்துகொள்ளும் வழிமுறைகள் போன்றவற்றை மையமாக கொண்டு அது அமைந்திருக்க வேண்டும். குழந்தைகள் தங்கள் பாதுகாப்பை உறுதிசெய்ய புகார் தரும் முறை, குறை தீர்முறை அடங்கிய அமைப்புகளையும் அது கொண்டிருக்க வேண்டும்

3. சட்டப்பூர்வமாக குழந்தை பாதுகாப்பு கொள்கையை கண்டிப்பாக ஒவ்வொரு பள்ளியிலும் அமலாக்கும் வகையில் அனைத்துப்பள்ளிகளிலும் உள்ள பள்ளித் தாளாளர்கள், முதல்வர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், நிர்வாக ஊழியர்கள், சேவைப்பணியில் உள்ள காவலர்கள், ஓட்டுனர்கள், தோட்டக்காரர்கள், சமையல் உதவியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் "குழந்தை பாதுகாப்பு கொள்கை" குறித்து முழுமையாகப் புரிந்துகொள்ளும் வகையில் திறன் அறியும் பயிற்சிகள் அளித்து ஒவ்வொரு குழந்தையின் மாண்பையும், மரியாதையையும் காப்பாற்றும் வண்ணம் அனைத்துக் குழந்தைகளும் அனைத்து வகையான தீங்கிழைத்தல்களிலிருந்து

பாதுகாக்கும் வகையில் மேற்கூறியவர்கள் அனைவரையும் குழந்தை பாதுகாப்புக் கொள்கையை ஏற்கச் செய்து அதை அன்றாடம் கடைப்பிடித்திடுமாறு நடைமுறைப்படுத்திட வேண்டும்.

4. குழந்தை ஸ்ரீ சிவராமின் மரணத்திற்கு பள்ளி பாதுகாப்பு குறைபாடுகளே காரணமாக இருந்துள்ளன. காலை 7.45 மணிமுதல் 8.45 மணிவரை பள்ளிக்கு வந்துசேரும் சுமார் 1200 குழந்தைகளை கவனித்துக்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாததும், கழிவறை வகுப்பறைக்கு வெகுதூரத்தில் இருந்ததும், அதனருகில் கூர்மையான கூழாங்கற்களை கொட்டிவைத்திருந்ததும், பள்ளியில் குழந்தைகளின் உரிமைகளை அறிந்த ஆசிரியர்கள் இல்லாததும் குழந்தைகளின் மனச்சோர்வு சிறுச்சிறு சச்சரவுகள் ஏற்படும்போது அவற்றை கண்டறிந்து தீர்ப்பதற்கு ஆலோசகர் இல்லாதது போன்ற அனைத்து தவறுகளும்தான் ஸ்ரீ சிவராமின் இறப்பிற்கு காரணமாகும். எனவே ஸ்ரீ சிவராமின் மரணத்திற்கு பொறுப்பேற்று, பள்ளி நிர்வாகம் குறைந்தபட்ச இழப்பீடாக ருபாய் 25,00,000 (இருபத்தைந்து இலட்சம்) மரணமடைந்த சிறுவனின் குடும்பத்தினருக்கு வழங்கவேண்டும்.

5. சந்தேகத்திற்கு இடமான முறையில் இறந்துபோன ஸ்ரீசிவராமின் மரணத்திற்கு முழு காரணமும் கதிரவன் கல்வி நிறுவனமே என்பதற்கு சாட்சியாக இந்நிறுவனத்தில் தற்போது எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளான முள்வேலிபோடுதல், கழிவறைகளை சுத்தம்செய்தல், குவித்துவைக்கப் பட்டிருந்த கரடுமுரடான/ கூர்மையான கற்களை அகற்றுதல், பள்ளியில் பல இடங்களில் கண்காணிப்பு கேமராக்களை பொறுத்துதல் போன்றவை உள்ளன. எனவே இவற்றை கண்காணிக்கும்படி வலியுறுத்தும் தமிழ்நாடு மெட்ரிக்குலேசன் பள்ளி விதிகள் அரசாணை எண் 270/22-10-2012-ன்படி தனது பணியை செய்யாமல்/கண்டுகொள்ளாமல் இருந்த தமிழ்நாடு மெட்ரிக்குலேசன் பள்ளிக் கண்காணிப்பு அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

6. இந்த சோக நிகழ்வானது அனைத்து துவக்கப்பள்ளிகளிலும் குழந்தைகள் வருகைக்குமுன் அப்பள்ளி ஆசிரியர்கள்/ பணியாளர்கள் பள்ளிக்கு வரவேண்டும் என்ற பாடத்தை புகட்டுகின்றது. மேலும் பள்ளியில் உள்ள அனைத்துக்கட்டுமானங்களும் குழந்தைநேய முறையில் வடிவமைக்கப்பட்டு அனைத்து குழந்தைகளும் எளிதில் பயன்படுத்தும் வகையில் அமைய வேண்டும். அதுமட்டுமல்லாது பள்ளியில் முறையான முதலுதவிபெட்டி இருப்பதை உறுதிசெய்து முறையாக பயிற்சி பெற்ற பணியாளர் ஒருவருடன் முறையாக பயிற்சிபெற்ற செவிலியர் ஒருவரும் பள்ளியில் இருக்கும் நடைமுறையை கொண்டுவருவதை கல்வித்துறை உறுதிசெய்திட வேண்டும்.

7. அனைத்து பள்ளிகளிலும் "குழந்தை பாதுகாப்புத் திட்டம்" ஒன்று தயாரிக்க வேண்டும். இத்திட்டத்தில் போக்குவரத்து, மருத்துவவசதிகள், கட்டுமானங்கள், குழந்தைகளின் வயதிற்கேற்ற கழிவறைகள் போன்ற முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஆசிரியர்கள் / பணியாளர்களுக்கு குழந்தை உரிமை, குழந்தை மனவியல், குழந்தைகளை தீங்கிழைத்தல்களிலில் இருந்து பாதுகாத்தல் மற்றும் குழந்தைகளை நல்வழிப்படுத்துதல் போன்ற முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய பயிற்சிகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து நடத்துவதை உறுதிசெய்ய வேண்டும்.

8. ஒவ்வொரு பள்ளியிலும் பயிற்சிபெற்ற குழந்தை ஆற்றுப்படுத்துனர் (child counsellor) பணியமர்த்தப்பட வேண்டும். இதன்மூலம் மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அடையாளம் காணப்பட்டு அவர்களுடைய மனரீதியான பிரச்சனைகளுக்கு தீர்வுகாண வழிவகை செய்யப்பட வேண்டும்.

9. ஒவ்வொரு பள்ளியிலும் குழந்தைகளின் நற்பண்புகளை வளர்க்கும் நோக்குடன் வன்முறையற்ற / அமைதிக்கு வழிவகுக்கும் நற்பண்பு கல்வி உறுதிசெய்யப்பட வேண்டும்.

10. தொலைக்காட்சி நிகழ்வுகள் குழந்தைகளுக்கு ஏற்றதாக, கற்பனைகளை வளர்ப்பதாக, தகவல்களை கொடுப்பதாக, நன்னடத்தைகளை மேம்படுத்துவதாக, சமூகத்துடன் இணைந்து செயல்படும் தன்மையை வளர்ப்பதாக இருக்கும்பொருட்டு துறைசார்ந்த முயற்சியை அரசு நெறிப்படுத்த வேண்டும். (தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கார்ட்டூன் வடிவில் இருந்தாலும் அதன் காட்சி அமைப்புகள் பெரும்பாலும் வன்முறையை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. இதனை பார்க்கும் குழந்தைகள் மனதில் அப்படியே பதிந்துவிடுகிறது.)

11.மெட்ரிக்குலேசன் பள்ளிகளை நெறிப்படுத்துவதற்கு மாவட்டங்களில் அமர்த்தப்பட்டுள்ள ஆய்வாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதால் அனைத்துப்பள்ளிகளையும் தொடர் ஆய்வு செய்வதற்கு முடியாத நிலை உள்ளது என்பதால் ஆய்வாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி அவர்களுக்கு ஐ.நா குழந்தை உரிமை உடன்படிக்கை, இந்திய அரசமைப்புசட்ட உரிமைகள், இலவச கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் மற்றும் தமிழக விதிகள், மெட்ரிக்குலேசன் பள்ளி விதிகள் ஆகியவை குறித்து தொடர் பயிற்சி அளிப்பதுடன், குழந்தைகளின் மனநிலையை அறிந்துகொள்ளும் மனோதத்துவ பயிற்சியும் அனைத்து ஆய்வாளர்களுக்கும் அளித்திட வேண்டும்.

12.தமிழகத்தில் 32 மாவட்டங்களிலும் உள்ள இளம்சிறார் நீதி குழும தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவருக்கும் இளம் சிறார் நீதிச்சட்டம் மற்றும் அதன் நோக்கம், மற்றும் குழந்தைக்கே முதலிடம், குழந்தை நலனே பிரதானம் என்ற ஐ.நா.குழந்தை உரிமை பிரகடனத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் குறிப்பிட்ட இடைவெளிகளில் தொடர் பயிற்சிகள் வழங்கவேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

**ஆதாரம்: தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு கூட்டமைப்பு**

# குழந்தை உரிமைகள் பாதுகாப்பு குறித்த உலகளாவிய சட்டங்கள்

## 5.1 சர்வதேச சட்டம்

ஐநா வின் குழந்தைகளின் உரிமை குறித்த உடன்படிக்கையின் (UNCRC) சட்டப்பிரிவு 28(2), ''குழந்தையின் மாண்போடு ஒத்துபோகும் படியாக மற்றும் தற்போதைய உடன்படிக்கையுடன் இணங்குவதாக பள்ளியில் ஒழுங்கு நிர்வாகிக்கப்படுவதை உறுதிச் செய்ய முறையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்'' என்பதை அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் கட்டாயமாக்குகிறது.

அதேபோல, உடன்படிக்கையின் சட்டப்பிரிவு 29(1), ''ஐநாவின் சாசனத்தில் புனிதப்படுத்தப்பட்ட கொள்கைகளுக்காக மற்றும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்கள் ஆகியவற்றின் மேலுள்ள மதிப்பை மேம்படுத்துவதை நோக்கி குழந்தையின் கல்வி இருக்குமென உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொள்ளும்'' என்பதை வலியுறுத்துகிறது.

மேலும், ஐநா வின் குழந்தைகளின் உரிமைக் குறித்த உடன்படிக்கையின் (UN CRC) சட்டப்பிரிவு 37(அ), ''எந்த குழந்தையும் சித்தரவதை அல்லது மற்ற கொடுமையான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான நடத்தல் அல்லது தண்டனை ஆகியவற்றிற்கு உட்படுத்தப்படகூடாது'' என்பதை அனைத்து உறுப்பு நாடுகளும் உறுதிச் செய்வதை கட்டாயமாக்குகிறது.

இதை உடன்படிக்கையின் சட்டப்பிரிவு 19(1) நிறைவு செய்கிறது. இது,''அனைத்து விதமான உடல் அல்லது மனம்–சார்ந்த வன்முறை, தீங்கு அல்லது மோசடி, புறக்கணிப்பு அல்லது அலட்சியமான நடத்தல், கொடுமைப்படுத்தல் அல்லது சுரண்டல், அத்துடன் பெற்றோர்கள், காப்பாளர் அல்லது குழந்தை எந்த ஒரு நபரின் பாதுகாப்பில் இருக்கும்போது பாலியல் வன்முறை ஆகியவற்றிலிருந்து குழந்தையை பாதுகாக்க அனைத்து சட்டரீதியான, நிர்வாக, சமூக மற்றும் கல்வி சார்ந்த அனைத்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்'' என்பதை உறுப்பு நாடுகளுக்கு கட்டாயமாக்குகிறது.

சட்டப்பிரிவு 19(2), ''இது போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் குழந்தை மற்றும் குழந்தையை பாதுகாப்பவர்களுக்கு தேவையான ஆதரவை அளிப்பதற்காக சமூக திட்டங்களை நிறுவுதல், அத்துடன் மற்ற விதமான தடுப்பு மற்றும் இங்கு விவரிக்கப்பட்டிருக்கும் குழந்தை கொடுமைப்படுத்துதல் சம்பவங்களை அடையாளப்படுத்த, தெரிவிக்க, மேற்கோளாகக் காட்ட, விசாரிக்க, சிகிச்சையளிக்க மற்றும் பின் தொடர, மற்றும் உரிய இடத்தில் நீதித்துறையை ஈடுபடுத்தல் ஆகியவற்றிற்கு ஆற்றல் வாய்ந்த செயல்முறைகளை, முறையான இடத்தில், உள்ளடக்க வேண்டும்.''

## 5.2 இந்திய அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகள்

மரியாதையான வாழ்க்கைக்கான உரிமையை பாதுகாக்கும் இந்தியாவின் அரசியலமைப்பிலுள்ள சட்டப்பிரிவு 21, 14 வயது வரைக்கும் குழந்தைகளுக்கு

கல்விக்கான உரிமையை உள்ளடக்கியது. உடல் ரீதியான தண்டனை வன்முறைக்கு சமமானது மற்றும் அது குழந்தையின் சுதந்திரம் மற்றும் மரியாதைக்கு மாபெரும் தடங்கலாக உள்ளது. குழந்தையின் கல்விக் கற்றலுக்கான உரிமைக்கு தடங்கலாகவும் இது உள்ளது, ஏனெனில் உடல் ரீதியான தண்டனை குழந்தைகள் பள்ளியை தவிர்க்கவும் அல்லது முழுமையாக இடை நிறுத்தம் செய்யும் வாய்ப்பை அதிகரிக்கிறது. இதனால், மரியாதையான வாழ்க்கைக்கான உரிமையை மீறுவதாக இந்த தண்டனை உள்ளது.

அரசியலமைப்பிலுள்ள சட்டப்பிரிவு 21(அ) ஆறு முதல் பதினான்கு வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வியை, சட்டத்தால் தீர்மானிக்கப்பட்ட முறையில் அரசு வழங்கலாம்.'' என்கிறது. இந்த அடிப்படை உரிமை 2009–இல் குழந்தைகளின் இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் இயற்றப்பட்டத்துடன் நடைமுறையாக்கப்பட்டது.

சட்டப்பிரிவு 39(உ) ''இளம் வயதுக் குழந்தைகளை மோசடிக்கு உட்படுத்தக்கூடாது'' என்பதை உறுதிச்செய்ய முன்னேற்றம் காணும் படியாக செயல்புரிய அறிவுறுத்துகிறது.

சட்டப்பிரிவு 39(ஊ) ''ஆரோக்கியமான முறையில் மற்றும் சுதந்திரமும் மரியாதையும் உள்ள சூழலில் குழந்தைகள் வளர வாய்ப்புகள் மற்றும் வசதிகளை தருவது, மேலும் குழந்தைப்பருவம் மற்றும் இளமை, அறம் மற்றும் பொருள் சார்ந்த கைவிடுதல் மற்றும் சுரண்டல் ஆகியவற்றிலிருந்து பாதுக்காக்கப்படுவதை'' உறுதிச்செய்ய முன்னேற்றம் காணும் படியாக செயல்புரிய அறிவுறுத்துகிறது.

## 5.3 இந்திய தண்டனைச் சட்டம்

இந்திய தண்டனைச் சட்டத்திலுள்ள பல்வேறு அளவில் இருக்கும் உடல் சார்ந்த தீங்கு மற்றும் அச்சுறுத்தல் ஆகியவற்றிற்கு தொடர்புடைய ஏற்பாடுகளை பயன்படுத்தி நிறுவன அமைப்பில் உடல் ரீதியான தண்டனையை குழந்தைகளுக்கு எதிராக விளைவிக்கும் குற்றவாளிகள் மேல் வழக்குத் தொடரலாம்.

இதில் அடங்குபவை:

- சட்டப்பிரிவு 305: குழந்தையின் தற்கொலைக்குத் தூண்டல்;
- சட்டப்பிரிவு 323: தன்னிச்சையாக காயம் செய்தல்;
- சட்டப்பிரிவு 325: தன்னிச்சையாக கடுமையாக காயம் செய்தல்;
- சட்டப்பிரிவு 326: தன்னிச்சையாக ஆபத்தான ஆயுதங்கள் அல்லது முறைகள் மூலம் காயம் செய்தல்;
- சட்டப்பிரிவு 352: இடரார்ந்த தூண்டுதல் இல்லையென்ற பட்சத்தில் தாக்குதல் அல்லது குற்றமுறு வன்முறை செய்தல்;
- சட்டப்பிரிவு 354: ஒரு பெண்ணின் தன்னடக்கத்தை புண்படுத்துதல்;
- சட்டப்பிரிவு 506: குற்றமுறு மிரட்டுதல்;
- சட்டப்பிரிவு 509: ஒரு பெண்ணின் தன்னடகத்தை அவமதிக்கும் நோக்கத்திலுள்ள வார்த்தை, சைகை அல்லது செயல்;

சமீபகாலம் வரையில் ஆசிரியர்கள் உடல் ரீதியான தண்டனை இழைக்கும்போது அவர்களின் அதிகாரத்தை விளக்க சட்டப்பிரிவு 88 மற்றும் 89–யினுடைய ஏற்பாடுகள் முன்வைக்கப்பட்டது. 'பொதுவான விதிவிலக்குகள்' என்ற அத்தியாயத்தில் உள்ள இந்த இரண்டு ஏற்பாடுகள் தண்டனைக்குரிய விளைவு இல்லாமல் இழைக்கப்படும் தீங்குகளை உள்ளடக்கும். ''நன்னம்பிக்கையுடன் எந்த ஒரு நபருக்கும், அவருடைய பலனுக்காக செய்யப்பட்ட'' தீங்கு செயலை சட்டப்பிரிவு 88 ஒரு குற்றமாக நடத்துவதிலிருந்து விலக்குதருகிறது. ''நன்னம்பிக்கையுடன் 12 வயதிற்குட்பட்ட நபரின் நலனுக்கு காப்பாளர் அல்லது சட்டப்பூர்வமான பொறுப்பில் இருக்கும் மற்ற நபர் ஆகியோரால் அல்லது அவர்களுடைய வெளிப்படை இசைவு அல்லது உட்கிடை இசைவு'' கொண்ட செயல்களை சட்டப்பிரிவு 89 விலக்குகிறது. எனினும், இந்திய தண்டனைச் சட்டத்தின் சட்டப்பிரிவுகள் 88 மற்றும் 89–க்கு முரணாக, ஹஷ்முக்பாய் கோகல்தாஸ் ஷா (எ) குஜராத் அரசு, 17 நவம்பர் 2008–யின் தீர்ப்பில் குஜராத் நீதிமன்றம் ''தற்போதைய சூழலில் உடல் ரீதியான தண்டனை குழந்தைக்கு அளிப்பது சட்டத்தால் அங்கீகரிக்கப் படவில்லை'' என்று தெளிவாக கூறியுள்ளது. மேலும், குழந்தைகளின் உரிமை குறித்த உடன்படிக்கைக்கு இந்தியா உறுப்பு நாடாகும்.

'குாந்தையின் உயரிய நலன்கள்' என்ற தகுதிநிலை தற்போது உள்நாட்டு சட்டத்தின் ஒரு பகுதியாகும். 2006–இல், பொது கருத்து எண். 8–இல் ''உடல் ரீதியான தண்டனை மற்றும் இதர கொடுமையான அல்லது இழிவான தண்டனை முறைகளில் இருந்து பாதுகாப்பு பெற குழந்தையின் உரிமை'' என்று மீண்டும் வற்புறுத்தும் போது, இந்தக் கடப்பாட்டை குழந்தைகளின் உரிமை குறித்த உடன்படிக்கை மேலும் விவரித்தது. கோட்பாட்டு ரீதியாக இந்திய சட்டத்தின் கீழ் உள்ள உடல் சார்ந்த தீங்கை இழைக்கும் குற்றவாளிகளை தண்டிக்கும் அனைத்து ஏற்பாடுகளும் உடல் ரீதியான தண்டனையை உள்ளடக்கும். இந்த ஏற்பாடுகள் பெரியவர்கள் மற்றும்

குழந்தைகளுக்கு இடையே வேறுபாடு செய்யாவிட்டாலும், நடைமுறையில், சமூகத்தில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுவதால் மற்றும் முறையானதாக கருதப்படுவதால் பள்ளிகள் மற்றும் இதர நிறுவனங்களில் நிகழும் உடல் ரீதியான தண்டனையை எதிர்த்து வழக்கு தொடராமல் போகும் போக்கு உள்ளது. ஆதலால் இந்த பகுதியில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் ஏற்பாடுகள், குறிப்பாக குற்றம் சார்ந்த ஏற்பாடுகள், உடல் ரீதியான தண்டனை சம்பவங்களில் பயன்படுத்தப்படும் சாத்தியம் உள்ளவை. ஆனால் மிகவும் அரிதாக பயன்படுத்தப்படுகின்றன.

## 5.4 கல்வி உரிமைச் சட்டம், 2009

5.4.1 1 ஏப்ரல் 2010 முதல் நடைமுறைக்கு வந்துள்ள இலவச மற்றும் கட்டாயக் கல்வி சட்டம், 2009–யின் சட்டப்பிரிவு 17(1) கீழ் 'உடல் சார்ந்த தண்டனை' மற்றும் 'மனம் சார்ந்த துன்புறுத்தல்' ஆகியவற்றை தடை செய்கிறது மற்றும் சட்டபிரிவு 17(2) கீழ் தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கிறது.

இந்த ஏற்பாடுகள் பின்வருமாறு: பிரிவு 17. குழந்தைக்கு எதிரான 'உடல் சார்ந்த தண்டனை' மற்றும் 'மனம் சார்ந்த துன்புறுத்தல்' ஆகியவற்றிற்கு தடை (1) எந்த குழந்தையும் 'உடல் சார்ந்த தண்டனை' அல்லது 'மனம் சார்ந்த துன்புறுத்தல்' ஆகியவற்றிற்கு உட்படுத்தப்படக் கூடாது. (2) துணைப் பிரிவு 1–ன் ஏற்பாடுகளை மீறுபவர்கள் யாராயினும், அந்த நபருக்கு பொருந்தும் விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

5.4.2 கல்வி உரிமைச் சட்டத்தின் சட்டப்பிரிவு 8 மற்றும் 9, ''தாழ்த்தப்பட்ட பிரிவை சேர்ந்த குழந்தைகள் மற்றும் பின் தங்கிய சமூகத்தை சேர்ந்த குழந்தைகள் வேற்றுமைப்படுத்தப்படாமலும் மற்றும் எந்த அடிப்படையிலும் தொடக்கக் கல்வியில் சேர மற்றும் முடிக்க தடுக்கப்படாமலும் இருப்பதை உறுதிச்செய்யும்'' கடமையை உரிய அரசு மற்றும் உரிய அதிகாரிகள் மேல் சுமத்துகிறது.

5.4.3 குழந்தைகளின் உரிமைகளுக்கு சம்மந்தப்பட்ட மீறல்களுக்கு மற்ற சட்டங்களை உபயோகிப்பதை கல்வி உரிமைச் சட்டம் விலக்கவில்லை, எடுத்துக்காட்டாக, இந்திய தண்டனை சட்டம் மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமைத் தடுப்பு சட்டம், 1989 ஆகியவற்றின் கீழ் குற்றங்களுக்கு எதிராக வழக்கு பதிவுச் செய்யப்படலாம்.

## 5.5 இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2000

இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2000, என்பது குழந்தைகளை மனதளவிலும் உடலளவிலும் துன்புறுத்தும் செயல்களை குற்றவியலாக்கும் முக்கிய சாசனமாகும்.

5.5.1 பிரிவு 23, இளஞ்சிறார் நீதி சட்டம் 2000 பின்வருமாறு குறிப்பிடுகிறது "சிறார் அல்லது குழந்தையின் பொறுப்பாளர்கள் குழந்தையை தாக்கினாலோ, புறக்கணித்தாலோ, வேண்டுமென்றே அலட்சியமோ அல்லது அம்பலப்படுத்தினாலோ, கடத்திக்கொண்டு போய் வேறொருவர் மூலம் தாக்கினாலோ அல்லது புறக்ககணித்தாலோ அல்லது அலட்சியம் அல்லது அம்பலப்படுத்துவதன் மூலம் அக்குழந்தையை மனதளவிலோ உடலளவிலோ துன்புறுத்தினால், அவர்கள் 6 மாத கால சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டுமே எதிர்கொள்ள வேண்டும்.

5.5.2 பிரிவு 23 குழந்தைகள் அல்லது சிறார்களின் மீதான பொறுப்பாளர்களின் செயலகளை உள்ளடக்கியுள்ளது. மேலும் பிரிவு 23 பெரும்பாலும் இளஞ்சிறார் நீதி சட்டம் விதிகளுக்குட்பட்டு நடத்தப்படும் குழந்தைகள் காப்போர் நிறுவனத்தில் குழந்தைகள் அல்லது சிறார்களை பாதுகாக்கும் பொறுப்பில் இருக்கும் பணியாளர்கள் இடையே பயன்படுத்த வாய்ப்பு அதிகம் என்றாலும், குழந்தைகள் மேல் கொடுமைகள் இழைக்கும் இடத்தில் இருக்கும் எவராயினும், பெற்றோர்கள், காப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் முதலாளிகள் அனைவருக்கும் விவாதத்திற்குரியதாக பொருந்தும்.

## 5.6 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மீதான (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989

5.6.1 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மீதான (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989–இல் உள்ள சில ஏற்பாடுகள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின குழந்தையின் மீது உடல் ரீதியான தண்டனை இழைக்கும் போது குற்றம் சாட்டப்பட்டவர் மீது வழக்கு தொடர பயன்படுத்தப்படலாம்.

## 5.7 மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம், 1955

மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் உள்ளடக்கிய பல்வேறு விதிமுறைகள், தீண்டாமையின் பெயரில் ஒரு நபர் மீதோ அல்லது மேலாளர் அல்லது பொறுப்பாளர் மீதோ வழக்கு தொடரவும் அதே சமயம் அந்தந்த கல்வி நிறுவனங்கள் அல்லது விடுதிகள் மீண்டும் தொடங்குவதிலிருந்தும் அல்லது அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள் இடைநீக்கம் செய்யப்படும்.

**தொகுப்பு: மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு**

http://www.dtnext.in/News/City/2016/05/05224553/Tam



குழந்தை மணமகள்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு முன்னிலை :
கணக்கெடுப்பு தரவு

# புதிரான சிக்கல்

குறைவான வயதில் திருமணமான
பெண் குழந்தைகள் குறித்த
புள்ளி விவரங்கள் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளன

**5480**
(சென்னையில் 15 வயதுக்குள் திருமணம் ஆன பெண் குழந்தைகளின் எண்ணிக்கை)

**82.52 லட்சம்**
பெண் குழதைகள் (15 வயதுக்கு குறைவாக) ஆவணப்படுத்துதலின் போது இருந்தார்கள். இவர்களில் 62500 பேர் திருமணமானவர்கள்.

**3025**
(15 வயதுக்குள் திருமணம் ஆன பெண் குழந்தைகளின் எண்ணிக்கை, கோவை மாவட்டம்)

**2000**
மதுரை, திருநெல்வேலி, சேலம் மாவட்டங்களில் 15 வயதிற்குள் திருமணமான பெண் குழந்தைகளின் எண்ணிக்கை

Varghese Kallada

ilnadu-leads-in-child-brides-Census-data.vpf

*Education Material Published on behalf of*


**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**

*# 54, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, India.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905,*
*E-mail : contact@hrf.net.in website : hrf.net.in*